**வட மாகாண சபை - 2012**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, வட மாகாண சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கணக்குகளில் அதிகரித்துக் கூறல்கள்**

கால் நடைப்பண்ணை, விவசாயப் பண்ணை மற்றும் இயந்திர வேலைத்தள முற்பணக் கணக்கு நடவடிக்கைகளிலுள்ள செலவு மீதிகளான ரூபா 12,756,497 தொகை நாட்குறிப்புப் பதிவுகளுனூடாக செலவு மீதிகளாக மாகாண நிதியக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தன. அதன் விளைவாக மாகாண நிதியக் கணக்கு ரூபா 12,756,497 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) கணக்குகளில் விடுபடுத்தல்கள்**

மாகாண சபையில் இயங்கிய ஐந்து முற்பணக் கணக்கு நடவடிக்கைகளில் நான்கு முற்பணக்கணக்கு நடவடிக்கைளின் மீதிகள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை

### 1.2.2 ஒதுக்கீட்டுக் கணக்குகளில் பொதுவான குறைபாடுகள்

முழுமையாக அல்லது பகுதியளவில் நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தாமை, ஆண்டு மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடின்றி செலவினம் செய்யப்பட்டமை, தவிர்க்கப்பட்டமை கணக்குகளில் நிலுவையான பொறுப்புக்கள் தவிர்ந்துவிடப்படுதல் மீண்டுவரும் செலவு மூலதனம் செலவாகவும் எதிர்மாறாகவும் தாக்கல் செய்யப்பட்டமை, மூலதனச் செலவினங்களிற்கான விபரங்கள் சமர்ப்பிக்கப்படாமை, சேமிப்புக்களிற்குப் போதிய விளக்கங்களின்மை மற்றும் திணைக்களப் பதிவேடுகளை மாகாணத் திறைசேரிப் பதிவேடுகளுடன் இணக்கம் செய்யாமை முதலிய மீண்டும் மீண்டும் விடப்படும் பொதுவான குறைபாடுகள் மீளாய்வாண்டிற்காக சில மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகளில் அவதானிக்கப்பட்டன.

இது தொடர்பாக காலத்திற்கு காலம் நிதி திட்டமிடல் அமைச்சு மற்றும் நிதி ஆணைக்குழு என்பவற்றிலிருந்து கிடைத்த நிதி சுற்றுநிருபங்கள் மற்றும் அறிவுத்துரைகளுடன் இணங்கிய வகையில் அவசியமான அறிவுறுத்துரைகள் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை சீராக்குவதற்காக மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கு வழங்கப்பட்டதாக பிரதம செயலாளர் தெரிவித்திருந்தார். இந்த குறைபாடுகளிற்கு மேலதிகமாக மீளாய்வாண்டிற்கான மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

(அ) பல செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகள் எழுந்தமான அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தமையால் பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் முறையாகவோ அல்லது பகுதியாகவோ பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்ட மாகாண திறைசேரி அறிவுறுத்தல்களுடன் இனங்காமை

(இ) சேமிப்புக்களிற்கான விளக்கங்கள் திருப்பதிகரமானதாகவோ அல்லது போதியளவிலோ இருக்கவில்லை.

(ஈ) வழங்கல்கள், எரிபொருள், மின்சாரம் முதலியன தொடர்பான ரூபா 38,058,183 தொகையான பொறுப்புக்களிற்கான சுதந்திரமான உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

(உ) 05 அமைச்சுக்கள் மற்றும் 07 திணைக்களங்கள் மதிப்பீட்டு ஏற்பாடுகளை விஞ்சி ரூபா 165,451,679 கூட்டு மொத்தமான செலவினம் செய்யப்பட்டிருந்தன. மேலும், மாகாண நிதி விதி (மா.நி.வி) 46 இன் பிரகாரம் அங்கீகாரம் மேலதிக செலவினம் செய்யப்பட்ட பின்னரே பெறப்பட்டன என்று அவதானிக்கப்பட்டது.

(ஊ) மாகாண சுகாதார திணைக்களத்தின் 10 விடயங்கள் தொடர்பாக்கப்பட்ட ரூபா 9,645,015 கூட்டு மொத்த நட்டங்கள் மீது 10 ஆண்டுகளிற்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மாகாண நிதி விதிகள் 61 தொடக்கம் 74 வரையுள்ளதன் பிரகாரம் ரூபா 27,199,678 கூட்டுமொத்த நட்டங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காதுதுடன் மாகாண சுகாதார திணைக்களம் மற்றும் கால்நடை உற்பத்தி --- திணைக்களத்தினால் 2012 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகளில் அவை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) செலவினத்தை ஈடுசெய்வதற்கான நிதி ஏற்பாடுகளின்மையால் ரூபா 113,105 தொகை கணக்குகளில் பொறுப்புக்களாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஐ) புதிய செலவின விடயங்களை உருவாக்காமல் 19 செலவினத் தலைப்புக்களின் கீழ் ரூபா 302,906,167 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்தது.
இது தொடர்பில் கண்காணிப்புப் பொறிமுறை பின்பற்றப்பட்டிருந்த போதிலும் எதிர்காலத்தில் சீராக்கப்பட வேண்டிய சில குறைபாடுகள் ஏற்பட்டதாக பிரதம செயலாளர் உரைத்திருந்தார்.

(ஒ) பல்வேறு மாகாண திணைக்களங்களின் மூலதன முன்னேற்றம் தொடர்பாக 110 விடயங்களின் மேற்கொள்ளப்பட்ட ரூபா 6,911,823 தொகையான மூலதனச் செலவினம் தவறாக மீண்டுவரும் செலவினத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது.

(ஓ) கணிப்பீட்டுச் சபை அறிக்கையின்படி, ஆண்டின் போது பெரும் எண்ணிக்கை சொத்துக்கள் காணாமல் போயுள்ளதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. ஆனால், திணைக்களங்கள் அவர்களுடைய ஒதுக்கீட்டுக் கணக்ககுகளில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் மாகாண நிதி விதி இல. 69 இன் பிரகாரம் நட்டங்கள் மீதான ஆரம்ப அறிக்கைகள் மற்றும் இறுதி அறிக்கைகள் அந்த திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 ஏடுகள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

மாகாண சபை பின்வரும் பதிவேடுகளைப் பேணியிருக்காததுடன் ஏனைய சில பதிவேடுகள் முறையாக மற்றும் நாளது வரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை என்று கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | தொடர்பான அதிகாரம் |
|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 இல் 842 ஆம் இலக்க திறைசேரி சுற்று நிரூபம் |
| கணனிப் பதிவேடு | 2002 நவம்பர் 28 இன் ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்று நிரூபம் |
| பொறுப்புக்களின் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| நட்டங்கள் மற்றும் சேதங்களின் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 மாகாண நிதி விதி இல 259 -01 |

இப்பதிவேடுகளின் பராமரிப்பு தொடர்பான தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டு எதிர்காலத்தில் பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பிரதம செயலாளர் கூறியிருந்தார்.

### 1.2.4 அரச உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்குகளில் குறைபாடுகள்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து ஏனைய மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கு மாற்றப்பட்டவர்களும் இளைப்பாறிய, மரணித்த செயற்திட்டங்களிற்கு விடுவிக்கப்பட்ட, பதவி வறிதாக்கிய மற்றும் இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்தும் வர வேண்டிய ரூபா 30,087,987 கூட்டு மொத்தத் தொகையான கடன் மீதிகளை அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் கல்வித் திணைக்களம் என்பன முறையே ரூபா 4,170,290 மற்றும் ரூபா 91,498 தொகையான இனங்காணப்படாத மீதிகளுடன் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரித்திருந்தன.

(இ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 610,063,838 ஆன வரவு மீதி தீர்க்கப்படாத கடன்கள் தொடர்பாக 05 அமைச்சுக்கள் மற்றும் 27 திணைக்களங்களிலிருந்து வர வேண்டியவை என்பதுடன் வரவு மீதிகளுக்கான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் கிடைத்திருக்காமையால் உண்மையான தேறக்கூடிய தொகையை பிரதிபலிக்கின்றதா என்பதைக் கணக்காய்வில் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.2.5 நிலுவையாகவிருக்கின்ற கட்டுநிதி மீதிகளின் தீர்ப்பனவு

(i) உள்ளூராட்சித் திணைக்களத்தால் ரூபா 5,786,000 கூட்டு மொத்தத் தொகையான கட்டுநிதி மீதி 2013 மார்ச் 28 வரை தீர்க்கப்படாது வைப்பாக இருந்தன. இது சம்பந்தமாக உரிய நிறுவனமிடமிருந்து நிலுவையிலுள்ள கட்டுநிதி மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 626,681 தொகையான தீர்க்கப்படாத கட்டு நிதி 2012 ஆம் ஆண்டின் இறுதியில் மாகாண சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்தால் தீர்ப்பனவு செய்யாது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

### 1.2.6 வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் கணக்குகளிலுள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) கால்நடைப் பண்ணைகள் பராமரிப்பு – விடய இல. 43202

(அ) பூந்தோட்டம் செக்கடிப்புலவு மற்றும் அச்சுவேலி என்பவற்றிலுள்ள கால் நடைப் பண்ணைகளின் நிலையான சொத்துக்களின் பெறுமதி உறுதிப்படுத்தப்பட்டு கணக்குகளிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வட மாகாண சபையின் வர்த்தக முற்பணக் கணக்கு முயற்சி நடவடிக்கைகளிற்கான ஆளணி மாகாண ஆளணி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டு நிச்சயிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முற்பணக் கணக்கு நடவடிக்கையின் தொழிற்பாட்டில் எதிர்பார்க்கப்பட்ட நட்டங்களிற்கான ஏற்பாடு மாகாண நிதி விதி 18.3 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாகாண நிதி விதி 18.3 இன் பிரகாரம் நட்டங்களிற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) எல்கேஏஎஸ் 6 இன் பிரகாரம் காசோட்டக் கூற்று நிதிக் கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) புடவைக் கைத்தொழில் - விடய இல 47302**

(i) நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பில் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் எல்கேஏஎஸ் 3 இன் பிரகாரம் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

(ii) எல்கேஏஎஸ் 6 இன் பிரகாரம் காசோட்டக் கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான ரூபா 1,649,559 பெறுமதியான இறுதி இருப்புக்கள் கிரயம் அல்லது தேறகூடிய விலைகளில் எது குறைவோ அதில் காட்டப்படுவதற்குப் பதிலாக விற்பனை விலையில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், இருப்பு மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்கு தரப்பட்டிருக்கவில்லை.

(iv) ஒவ்வொரு நிலையத்தினது செயலாற்றலை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு நிலையத்திற்குமான புறம்பான இலாப நட்டக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) சாயமூட்டும் விடயங்களின் பெறுவனவு மற்றும் அவற்றை நெசவு நிலையங்களிற்கிடையில் விநியோகித்தமை தொடர்பான முறையான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(vi) கொள்வனவு காலத்தின் போது உற்பத்திக்காக இருக்கும் இருப்பின் அளவைக் கருதில் கொள்ளாமல் புடவைக் கைத்தொழில்

திணைக்களத்தால் நூல் பந்துகளின் மேலதிக அளவுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இதன்விளைவாக பெருந்தொகையான பணம் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படாத நூல்களின் கொள்வனவிற்குப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அவை களஞ்சியத்தில் பயன்பாடின்றி வைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் மாகாண திறைசேரியால் நிதிகள் எதுவும் வழங்கப்பட்டிருக்காதுடன் இந்நடவடிக்கைகளை நாங்கள் முகாமைத்துவம் செய்து பணியாற்றி விற்பனை வருமானத்திலேயே மேற்கொண்டிருப்பதாக பிரதம செயலாளர் உரைத்திருந்தார்.

### 1.2.7 வருமானக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆண்டு நிதிக் கூற்றுக்களில் ரூபா 172 மில்லியன் கூட்டு மொத்தத் தொகை ஆறு வருமானக் குறியீடுகளின் கீழ் மதிப்பிடப்பட்ட வருமானமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் வருமானக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் வருமானக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக பிரதம செயலாளர் உரைத்திருந்தார்.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பிற்கான 13 ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்க வதிவிடங்களிற்கான வாடகை, முற்பணக் கணக்குகளின் வட்டி, வாகன உத்தரவு பத்திரக் கட்டணங்கள் மற்றும் முத்திரைத் தீர்வைகள் போன்றவாறான வருமானங்களான ரூபா 1,648,695,529 தொகை மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்கள் இல்லாது சபையின் மாகாண நிதியத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

### 1.2.8 வங்கிக் கணக்கினக்கக் கூற்றுக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கிகளிலிருந்து விசாரனைகளை மேற்கொள்ளவதன் மூலம் 6 மாதங்களிற்கு மேற்பட்ட காலமாக உள்ள ரூபா 45,600 தொடரும் தேறாத வைப்புக்களில் மாகாண கல்வித் திணைக்களத்தினால் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வழங்கப்பட்ட ஆனால் ஆறுமாதங்களிற்கு மேல் கொடுப்பனவுகளிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ரூபா 2,107,492 பெறுமதி கொண்ட 74 எண்ணிக்கையான காசோலைகள் மீது மா.நி.வி 237 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதம செயலாளரின் செயலகம், முகாமைத்தவ அபிவிருத்தி பயிற்சி நிறுவகம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், கைத்தொழிற் திணைக்களம் மற்றும் கிராம அபிவிருத்தி திணைக்களம் என்பவற்றின் வங்கிக் கணக்கிணக்கங்கள் தொடர்பாக ரூபா 105 மற்றும் ரூபா 1,002,704 தொகையான முறையே இணங்காணப்படாத வரவுகள் மற்றும் செலவுகள் அவதானிக்கப்பட்டன. இந்த வரவுகள் மற்றும் செலவுகளை இனங்காண்பதற்கும் சம்பந்தப்பட்ட கணக்குகளைச் சீராக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.9 பொது வைப்புக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் ஒவ்வொரு அரையாண்டு முடிவிலும் காலங் கடந்த வைப்புக்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் கணக்குகளில் உள்ள 03 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 86,175,791 தொகை வைப்பு மீதிகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 2 ஆண்டுகள் காலத்திற்கு மேற்பட்ட நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடிந்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராத பொது வைப்புக்களின் பெறுமதி ரூபா 20,965,636 ஆகும்.

(ஈ) மீளாய்வாண்டில் முத்திரைத் தீர்வை, ஓய்வூதிய நிதிய உதவு தொகை கடன் அறவீடுகள், அரச சேவை சேமலாப நிதிய உதவு தொகை மற்றும் தடுத்து வைத்தல் வரி என்றவாறாக கிடைத்த ரூபா 1,874,498 தொகை சம்பந்தப்பட்ட நிறுவனங்களிற்கு அனுப்பாமல் வைப்புக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது.

(உ) சுகாதார அமைச்சு, உள்ளுராட்சி திணைக்களம், விளையாட்டுத் திணைக்களம் மற்றும் விவசாயத் திணைக்களம், என்பவற்றின் கீழுள்ள ரூபா 88,471,799 ஆன

மூலதன ஏற்பாடு மற்றும் ரூபா 31,098,274 ஆன மீண்டுவரும் ஏற்பாடுகளும் மாகாண நிதி விதி 215(3) இற்கு முரணாக ஆண்டின் போது செலவிடப்பட்டிருக்காத ஏற்பாடாக வைப்புக் கணக்குகளிற்கு மாற்றப்பட்டிருந்தன. இந்தப் பணம் 2013 ஒக்தோபர் 31 வரை குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக செலவினம் மேலதிகமாக காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 3 செயற்திட்டங்கள் தொடர்பான ரூபா 2,233,912 ஆன நிதிகள் குறித்த நோக்கங்களிற்காகப் பயன்படுத்தப்படாது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தன.

(எ) அமைச்சுக்கள் மற்றும் ஆளுநர் செயலகம் உட்பட ஒன்பது திணைக்களங்களால் பல்வேறு நோக்கங்களிற்க்கு கிடைத்த ரூபா 110,156,734 கூட்டுமொத்தத் தொகையான நிதிகள் குறித்த நோக்கங்களிற்குப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது 2 ஆண்டுகளிற்கு மேல் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தன. விபரங்கள் வருமாறு.

| | திணைக்களத்தின் பெயர் | வைப்பின் வகை | காலம் (ஆண்டுகள்) | தொகை ரூபா |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| i | ஆளுநர் செயலகம் | வாகனம் மற்றும் காணிக் கொள்வனவு மற்றும் பிடிகாசு என்பன | 3 – 4 இற்கு மேல் | 86,160,341 |
| ii | உள்ளுராட்சித் திணைக்களம் | பி/உ/.உ.ஆ. கிளிநொச்சி தேறாத காசோலைகள் | 2 – 3 இற்கு மேல் | 6,299,058 |
| iii | விவசாயத் திணைக்களம் | வரிசை அமைச்சிலிருந்தான வைப்பு உணவு மற்றும் விவசாய நிறுவன செயற்திட்ட நிதி மற்றும் ஏனைய வைப்புக்கள் | 2 – 3 இற்கு மேல் | 6,292,949 |

| | | | | |
|---|---|---|---|---|
| iv | கைத்தொழில் திணைக்களம் | பிடிகாசு | 2 – 3 இற்கு மேல் | 82,067 |
| v | நன்னடத்தை மற்றும் சிறுவர் நலனோம்புச் சேவை திணைக்களம் | மோட்டார் சைக்கிள் கடன் அறவீடு | 2 – 3 இற்கு மேல் | 995,925 |
| vi | முகாமைத்துவ பயிற்சி நிறுவனம் | சான்றிதழ் பாடநெறிக் கட்டணம் | 2-3 இற்கு மேல் | 6,250 |
| vii | கல்வித் திணைக்களம் | (i) பட்டபின்படிப்பு டிப்ளோமா பிடிகாசு | 3 இற்கு மேல் | 15,450 |
| | | (ii) இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் சனாதிபதி நிதிய புலமைப்பரிசில் | 2 – 5 இற்கு மேல் | 5,127,403 |
| viii | சுகாதார சேவைகள் திணைக்களம் | பிடிகாசு | 2 – 3 இற்கு மேல் | 2,120,538 |
| ix | கட்டிடங்கள் திணைக்களம் | பிடிகாசு | 2 – 3 இற்கு மேல் | 3,056,753 |
| | | | | 110,156,734 |

(ஏ) உணவு, விவசாய தாபனம் உள்ளடங்கலாக பல அரசசார்பற்ற நிறுவனங்களால் விவசாயிகளிற்கிடையில் இலவசமாக விநியோகிப்பதற்காக நன்கொடையளிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் விவசாய அமைச்சினால் அலுவலவர்களிற்கு சலுகை விலையில் வழங்கப்பட்டன. இது தொடர்பில் மோட்டர் சைக்கிள் நலனாகளிடமிருந்ததுனடன் மேற்கொள்ளப்பட்ட ரூபா 71.4 மில்லியன் தொகை அறவீடுகள் மாகாண வருமானத்திற்கு வரவு வைக்ககப்படாது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தன.

### 1.2.10 கணக்காய்விற்கான் சான்றுகளின்மை

(அ) 18 மாகாண சபை நிறுவனங்கள் தொடர்பான கணக்குகளிலுள்ள ரூபா 108,976,253 கூட்டு மொத்தத் தொகை கொண்ட 732 விடயங்களை பட்டியல்கள், பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுக்கள், தேவைப்பட்டியல்கள், உறுதிப்படுத்தல்கள், பொருட்கள் பெற்றுக் கொண்ட குறிப்புக்கள், பொருள் வழங்கப்பட்ட குறிப்புக்கள், வேலை பூர்த்தியாக்கற் சான்றிதழ்கள் முதலிய அத்தகைய வேண்டப்பட்ட சான்றுகளின்மையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

**(ஆ) கணக்காய்விற்குத் தகவல்களைச் சமர்ப்பித்தல்**

(i) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் விபத்துக்களிற்குள்ளான மாகாண சபைக்குச் சொந்தமான பல்வேறு வாகனங்களிருந்த போதிலும் வாகனங்களின் விபத்துக்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் ஏனைய விபரங்கள் போன்றன கோரப்பட்ட போதிலும் கூட கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(ii) ஆளணி வேண்டுகோள், ஆட்சேர்ப்புத் திட்டம், வயது எல்லைகள், மற்றும் கல்வித் தகைமைகள் என்பவற்றைக் கருத்திற்கொள்ளாது மாகாண சபையினால் உள்ளூராட்சி சபைகளிற்கு பல்வேறு நியமனங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அந்த நியமணங்கள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அமைச்சுக்கள், மற்றும் திணைக்களங்களால் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களிற்குச் செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி பற்றிய விபரங்கள் கோரப்பட்ட போதிலும் கூட கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மீளாய்வாண்டில் பொதுச் சேவை ஆணைக்குழுவால் நியமனங்கள், உள்ளீர்தல்கள், உறுதிப்படுத்தல்கள், மாற்றங்கள் மற்றும் பல்வேறு ஒப்பந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் கூட்டக் குறிப்புக்கள் கோரப்பட்ட போதிலும் கணக்காய்வு பரிசோதனைகளிற்கு தரப்பட்டிருக்கவில்லை.

(v) ஆளுநர் செயலத்துடன் இணைக்கப்பட்ட வாகனங்களின் விபரங்கள் மற்றும் எரிபொருள் மற்றும் வாகனப் பராமரிப்பிற்கு செய்யப்பட்ட செலவினம் என்பன கோரப்பட்ட போதும் கணக்காய்வு பரிசோதனைகளிற்காக தரப்பட்டிருக்கவில்லை.

(vi) சட்ட ஆலோசனையாளர் பற்றிய நியமன அடிப்படை, பணி பட்டியல், மாதாந்த கொடுப்பனவு விபரங்கள், வருகை மற்றும் நியமனத்திகதி மேற்கொள்ளப்பட்ட ஆலோசனை விபரங்கள் என்பவை போன்ற விபரங்கள், கோரப்பட்ட போதிலும் கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்கவில்லை. பொருத்தமான ஆட்சேர்ப்பு நடைமுறையை பின்பற்றி இந்த ஒப்பந்த நியமனத்தை பொதுச் சேவை ஆணைக்குழு வழங்கியது. சட்ட உத்தியோகத்தர் நிலைக்கான விண்ணப்பங்கள் கிடைக்காமையால் பொதுச் சேவை ஆணைக்குழுவால் விசேட கொடுப்பனவு தீர்மானிக்கப்பட்டதாகவும் அலுவலக வாகனம் எரிபொருள் வழங்கப்படவில்லை என்றும், இது தொடர்பில் பிரதம செயலாளர் அறவித்திருந்தார்.

(viii) ரூபா 12.1 மில்லியன் கிரயத்தில் நடாத்தப்பட்ட பல்வேறு செயலமர்வுகள் மற்றம் கருத்தரங்குகள் தொடர்பாக 2013 பெப்ரவரி 13 இல் மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டன. அவை தொடர்பாக கோரப்பட்ட தகவல்கள் கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்கவில்லை.

(இ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

மீளாய்வாண்டில் பின்வரும் திணைக்களங்களிற்கு வழங்கப்பட்ட ஒன்பது கணக்காய்வு ஐய வினாக்களிற்கான பதில்கள் 2013 திசெம்பர் 31 வரை தரப்பட்டிருக்காததுடன் அந்தக் கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பான் கொடுக்கல் வாங்கல்களின் அளவிடத்தக்க பெறுமதி ரூபா 64.95 மில்லியன் தொகையாகும்.

| அமைச்சு/திணைக்களம் | கணக்காய்வு ஐய வினாக்களின் எண்ணிக்கை | தொகை ரூபா.மில்லியன் |
|---|---|---|
| கல்வித் திணைக்களம் | 03 | 48.30 |
| விளையாட்டுக்கள் திணைக்களம் | 02 | 2.97 |
| கல்வி அமைச்சு | 02 | 2.98 |
| விவசாய அமைச்சு | 02 | 10.70 |
| | 09 | 64.95 |

## 1.11 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை கீழே தரப்படுகின்றன.

(அ) மாகாண நிதி விதிகள்

இலக்கங்கள் :- 51, 69, 70, 70(5), 76, 105, 106, 107, 166, 172, 220(1), 237, 260(iii), 261, 301, 368, 407, 420(i), (v), (XIII), 433, 434(2), 434(5), மற்றும் 434(6) என்பன

### (ஆ) மத்திய அரசாங்கத்தின் கொள்கைகளிற்கு முரணாக தாபன விடயங்களை அமுலாக்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சினால் வழங்கப்பட்ட 1999 யூன் 01 ஆம் திகதிய பீடி/பீபீ/9 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின்படி, மாகாண அரச சேவையின் உத்தியோகத்தர்களின் தாபன விடயங்களின் அமுலாக்குதல் அரசாங்க சேவையின் நேரொத்த பதவிகளிலுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பான நடை முறைகளுடன் இயலக்கூடியளவில் இணங்கியதாக இருக்க வேண்டும்.

அந்த ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) ஒரு செயலாளருக்கு ரூபா 150,000 (அண்ணளவாக) பெறுமதி கொண்ட வீட்டுப் பாவனைப் பொருள்களுடன் முற்றாக தளபாட வசதி கொண்ட வாடகைக்கு எடுத்த வீடுகளில் குடியிருக்கும் 03 செயலாளர்களிடமிருந்து வாடகை அறவிடப்பட்டிருக்காததுடன் வாடகைக்கு எடுத்த அந்த உத்தியோகத்தர்கள் குடியிருக்கின்ற அந்த வீடுகளிற்கான மின்சாரம் மற்றும் நீர்ப்பட்டியல்களின் கொடுப்பனவும் மாகாண நிதிகளிலிருந்தே மேற்கொள்ளப்பட்டிருந்தன. அரசாங்க விடுதிகளில் குடியிருப்பதற்காக செயலாளர்கள் உட்பட சகல உத்தியோகத்தர்களிடமிருந்தும் வாடகை அறவிடுவதற்கு தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.3 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் மின்சாரம் மற்றும் நீர்ப்பட்டியல்கள் அவர்களால் தீர்க்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பில் பதவியணியினர் விடுதிகளின்மை காரணமாக விசேட அங்கீகாரத்துடனும் செயலாளர்கள் மற்றும் பிரதம செயலாளர்களிற்காக அவர்கள் குடியிருப்பதற்காக அவர்களின் சம்பளத்திலிருந்து ரூபா 500 அறவிடப்பட்டு வீடுகள் வாடகைக்கு எடுக்கப்பட்டன. என்றும் பிரதம செயலாளர் உரைத்திருந்தார்.

(ii) பொருத்தமான கொள்வனவு நடை முறையைப் பின்பற்றாது 2011 சனவரியிலிருந்து அலுவலக நோக்கங்களிற்காக மாகாண சபை 12 எண்ணிக்கையான கட்டிடங்களை வாடகைக்கு எடுத்திருந்தது. மேலும் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்கான வாடகையாக ரூபா 15 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் வாடகை கொடுப்பனவிற்கான விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதம விலை மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீடு பெறப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பாக அலுவலக கட்டிடங்கள் இல்லாத காரணத்தால் விசேட அங்கீகாரத்துடனும் பொருத்தமான கொள்வனவு முறையைப் பின்பற்றியும் அலுவலக நோக்கங்களுக்காக வீடுகள் வாடகைக்கு எடுக்கப்பட்டன அந்த நேரத்தில் விலை மதிப்பீட்டு அறிக்கைகள் உடனே பெற்றுக்கொள்ள முடியவில்லை இது

அப்போது சீராக்கப்பட்டுள்ளது என்று பிரதம செயலாளர் உரைத்திருந்தார்.

(iii) சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாது மீளாய்வாண்டில் மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுடன் இணைக்கப்பட்டிருந்த பதவியினருக்கான சம்பளங்களாக ரூபா 10,655 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iv) பிராந்திய ஆணையாளர்களிற்கான பதவியணி அங்கீகரிக்கப்பட்டிருக்காத போதிலும், இலங்கை நிருவாக சேவை அலுவலகங்கல்லாத மீள் நியமனம் பெற்றவர் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவிற்கான பிராந்திய ஆணையாளர்களாகக் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தார். 2011 மே 11 ஆம் திகதிய 9/2007 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றுநிருபத்திற்கு முரணாக வாகனப் பராமரிப்பு, எரிபொருள் மற்றும் ஏனைய அலுவலக பேணுகை செலவினங்களிற்கு மேலதிகமாக சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 5,434,345 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பிராந்திய ஆணையாளர்கள் கௌரவ ஆளுநர் அவர்களால் சரியாக நியமிக்கப்பட்டிருந்ததுடன் முகாமைத்துவ உதவியாளர்கள் சாரதிகள் அலுவலக ஊழியர்கள் கொண்ட பதவியணி மாகாண பொது நிருவாகத்தால் நியமிக்கப்பட்டிருந்தனர் என்று ஆளுநரின் செயலாளர் உரைத்திருந்தார்.

## 2. நிதிசார் மற்றும் தொழிற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டில் மாகாண சபையின் செயற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 910,610,794 ஆன பற்றாக்குறைக்கெதிராக முன்னைய ஆண்டிற்காக ரூபா 721,712,394 ஆன மிகை ஏற்பட்டிருந்தது. அது அரசாங்க மானியங்களில் ரூபா 1,136,.6 மில்லியன் குறைந்தமை மொத்தச் செலவினம் ரூபா 830.6 மில்லியனால் அதிகரித்தமை மற்றும் ரூபா 335.9 மில்லியனால் வரிவிதிப்பு

வருமானம் அதிகரித்தமை என்பன காரணமாக நிதிசார் விளைவுகளில் ரூபா 1,632.3 மில்லியனான வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

## 2.2 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினத்தின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

**வருமானம்**

| | 2012 | | | 2011 | | |
|---|---|---|---|---|---|---|
| **வருமான விடயம்** | **பாதீடு** | **உண்மையானவை** | **முரண்** | **பாதீடு** | **உண்மையானவை** | **முரண்** |
| | **ரூபா.மில்** | **ரூபா.மில்** | **ரூபா.மில்** | **ரூபா.மில்** | **ரூபா.மில்** | **ரூபா.மில்** |
| வரியுள்ள மற்றும் வரியற்ற வருமானம் | 172 | 1,648.70 | 1476.70 | 42.0 | 1,312.80 | (1,270.80) |
| அரசாங்க மானியங்கள் | 12,383 | 9.733.20 | (2,649.80) | 11,717.20 | 10,870.70 | 846.50 |
| | 12,555 | 11,381.90 | 1,173.10 | 11,759.20 | 12,183.50 | 424.30 |

**செலவினம்**

| | 2012 | | | 2011 | | |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம்** | **பாதீடு** | **உண்மையானது** | **முரண்** | **பாதீடு** | **உண்மையானது** | **முரண்** |
| | **ரூபா.மில்** | **ரூபா.மில்** | **ரூபா.மில்** | **ரூபா.மில்** | **ரூபா.மில்** | **ரூபா.மில்** |
| ஆளுக்குரிய வேதனங்கள் | 8055 | 8,244 | (189) | 7,606 | 7,583 | 23 |
| ஏனையவை | 2,274 | 2,411 | (137) | 2,162 | 2,124 | 38 |
| உப மொத்தம் | 10.329 | 10,655 | (326) | 9,768 | 9,707 | 61 |
| மூலதன | 2,054 | 1,637 | 417 | 1,949 | 1,754 | 195 |

செலவினம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இறுதி மொத்தம் | 12,383 | 12,292 | 91 | 11,717 | 11,461 | 256 |

## 2.3 தொழிற்பாட்டு மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான மொத்தச் செலவினம் ரூபா 12,292 மில்லியனாக இருந்ததுடன் அதில் 87 சதவீதம் மீண்டுவருஞ் செலவினத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய அதே சமயம் 13 சதவீதம் மூலதனச் செலவினத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. மேலும், மொத்தச் செலவினத்தில் ரூபா 8,244 மில்லியன் அல்லது 67 சதவீதம் ஆளுக்குரிய வேதனங்களிற்காகச் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மோட்டர்ர் வாகன உத்தரவுப் பத்திரங்களின் கீழான வருமான நிலுவை வருமானம் உறுதிப்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பில் மாகாண சபை இல்லாமையால் பொருத்தமான நிதிச் சட்டவாக்கமின்றி வருமானத்தை உறுதிப்படுத்த முடியவில்லை. எதிர்காலத்திற்காகக் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது என்று பிரதம செயலாளர் உரைத்திருந்தார்

## 2.4 பயன்படுத்தப்படாத நிதி ஏற்பாடுகள்

(அ) மீளாய்வாண்டிற்கான ஆண்டு நிதிக்கூற்றுக்களில் 18 செலவினத் தலைப்புக்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 205,522,846 கூட்டு மொத்த தொகையான முழு ஏற்பாடும் குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் 18 செலவின விடயங்களின் கீழ் பெறப்பட்ட ரூபா 302,742,166 தொகையான குறைநிரப்பு ஏற்பாடுகள் குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.5 அங்கீகாரமற்ற செலவினங்கள்

27 திணைக்களங்களால் நிதி ஏற்பாடுகளின்றி ரூபா 88,984,137 கூட்டுமொத்தத் தொகையான மூலதன செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் மிகையறவீட்டு கணக்குகளுடாக ஆண்டுறுதியில் செலவினம் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன.

## 2.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

31 தலைப்புக்களின் பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் கீழ் 200 எண்ணிக்கையான குறைநிரப்பு மதிப்பீடுகளினூடாக ரூபா 1,625,921,528 தொகையான நிதிகள் மாற்றப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், பாதீடானது உரிய நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் இனங்காணப்பட்ட நிதிச் சேவைகள் மற்றும் 2011 இல் நிதி ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட சுற்றுநிரூபங்கள் என்பனவற்றிக்கு இணங்கியதாக 2012 ஆம் ஆண்டின் பாதீடு தயாரிக்கப்பட்டது. எனினும், 2012 இல் கல்வி, சுகாதாரம் மற்றும் ஏனைய திணைக்களங்களிற்காக 896 எண்ணிக்கையான உத்தியோகத்தர்கள் எதிர்பார்க்கப்படாதவாறு நியமிக்கப்பட்டன. அதன் பிரகாரம் கொடுப்பனிவிற்கான மேலதிக ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டமையால் குறைநிரப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக 2012 ஆம் ஆண்டிலும் வடமாகாணத்திலும் உள்ளக இடபெயர்ப்பு (ஐடீபீஎஸ்) மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிக்கும் தொடர்ச்சியான செயல்முறையும் இடம்பெற்றிருந்தன. இதன் விளைவாக மூலதன வாக்குப் பணத்திக்கும் ஐடிபீஎஸ் தொடர்பான வேலைகள் செலவுகளை ஈடுசெய்வதற்காக அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கு குறைநிரப்பு ஏற்பாடு வழங்கப்பட்டன என்றும் இது தொடர்பில் பிரதம செயலாளர் உரைத்திருந்தார்.

## 2.7 மாகாண நிதிகளின் பயன்பாடு

மாகாண சபையின் அபிவிருத்தி வேலை முன்மொழிவுகளிற்காக பல்வேறு மூலங்களிலிருந்து கிடைத்த நிதிகளின் விபரங்கள் மற்றும் அதில் செய்யப்பட்ட செலவுகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| | விடயங்களின் விபரம் | கிடைத்த நிதிகள் | உண்மையான செலவினம் | சேமிப்பு | பயன்பாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | % |
| (i) | மாகாண குறித்த அபிவிருத்தி மானியங்கள் (பீஎஸ்டீஜீ) | 1,294,391,000 | 974,420,715 | 259,970,275 | 75 |
| (ii) | கல்வித்துறை அபிவிருத்தி செயற்திட்டம் (ஈஎஸ்டிபீ) / ரீஎஸ்ஈபீ | 144,000,000 | 125,000,000 | 19,000,000 | 87 |
| (iii) | வடமாகாண வீதி இணைப்பு செயற்திட்டம் (என்ஆர்சீபீ) | 870,000,000 | 748,536,992 | 121,463,008 | 86 |
| (iv) | ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யூனிசேவ்) | 286,609,000 | 286,608,554 | 446 | 100 |
| (v) | மாகாண வீதி செயற்திட்டம் (பிஆர்பீ) | 503,000,000 | 446,830,711 | 56,169,289 | 89 |
| (vi) | பிரமாண அடிப்படை மானியம் (சீபீஜீ) | 294,000,000 | 208,920,530 | 85,079,470 | 71 |
| (vii) | ஏழைகளிற்காதரவான கிராமிய அபிவிருத்தி செயற்திட்டம் / ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் (யூஎன்எவ்பீஏ) | 40,000,000 | 3,706,560 | 36,293,440 | 9 |
| (viii) | நவோதய வடக்கு மாகாண சபை 1000 பாடசாலைகள் | 50,000,000 | 38,501,045 | 11,498,955 | 77 |
| (ix) | யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் செயற்திட்டம் | 85,000,000 | 10,099,050 | 74,900,950 | 12 |
| (x) | சுகாதாரத்துறை அபிவித்தி செயற்திட்டம் (எச்எஸ்டீபீ) | 5,000,000 | - | 5,000,000 | இல்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (xi) | வடமாகாணத்திற்கான உள்ளூர் மட்ட போஷாக்கு தலையீடு செயற்திட்டம் | 15,000,000 | 132,493,283 | 27,506,707 | 82 |
| (xii) | இரணைமடு நீர்ப்பாசன செயற்திட்டம் | 200,000,000 | 2,964,442 | 197,035,338 | 2 |
| | | 3,787,000,000 | 2,978,081,882 | 893,917,888 | |

மூலதனச் செலவுகளிற்காக மேற்படி மூலகங்களிலிருந்து மீளாண்வாண்டில் கிடைத்த ரூபா 894 மில்லியன் தொகையான நிதிகள் குறித்த நோக்கங்களிற்காகப் பயன்படுத்தப்படாது மாகாண சபையால் பேணப்பட்ட வங்கிக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2011 சனவரியிலிருந்து 2012 திசெம்பர் வரை ரூபா 974.3 மில்லியனிலிருந்து ரூபா 1,775.1 மில்லியன் வரை வங்கி மீதிகள் அதிகரித்திருந்த போதிலும் இந்த விடயம் எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இந்தப் பணத்தை பொது மக்களின் நன்மைக்காக பயன்படுத்துவதற்கு 2012 திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2008 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை வங்கி தப்ரபேன் கிளையில் ரூபா 5 மில்லியன் பெறுமதியான வங்கி மீதி எந்த நோக்கங்களிற்காகவும் பயன்படுத்தப்படாது வைக்கப்பட்டிருந்ததுடன் 5 ஆண்டுகளிற்கு மேலாக பயன்பாடற்று விடப்பட்டிருந்தன.

(ஈ) ஆளுநர் நம்பிக்கைப் நிதியத்தின் நிலையான வைப்புக் கணக்கு மற்றும் நடைமுறைக் கணக்கில் ரூபா 36.1 மில்லியன் மற்றும் ரூபா 171,154 தொகைகள் குறித்த நோக்கங்களிற்காகப் பயன்படுத்தப்படாது வைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் ஆளுநர் நம்பிக்கை நிதியத்தின் நிலையான வைப்பு மற்றும் வங்கிக் கணக்கு மீதியிலிருந்தான வருமானம் ஆளுநரின் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டன என்று பிரதம செயலாளர் உரைத்திருந்தார்.

## 2.8 மாகாண அபிவிருத்தித் திட்டம்

ரூபா 1,117.21 மில்லியன் மொத்தத் தொகைக்கான 299 வேலை பிரேரனைகள் புதிய வேலைகள் மற்றும் தொடரும் வேலைகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் முன்னேற்ற அறிக்கையின் படி வேலைகளின் முன்னேற்றம் கீழ் கொடுக்கப்பட்ட அட்டவனையில் காட்டப்படுகின்றன.

| | புதிய வேலைகள் | தொடரும் வேலைகள் | வேலைப் பிரேரணைகளில் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| முற்றாகப் பூர்த்தி செய்யப்பட்டவை | 237 | 22 | 259 |
| 50% இலும் குறைய பூர்த்தி செய்யப்பட்டவை | 07 | - | 07 |
| 50% இலும் கூட பூர்த்தி செய்யப்பட்டவை | 22 | - | 22 |
| ஆரம்பிக்கப்படாதவை | 11 | - | 11 |
| மொத்தம் | 277 | 22 | 299 |

## 2.9 மனித வள முகாமைத்துவம்

### 2.9.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான ஆளணி

வட மாகாண சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்மொழியப்பட்ட மற்றும் உண்மையான ஆளணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) மாகாண சபையின் பாடசாலைகள் தவிர்ந்த அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்

| வகுதி | பிரேரிக்கப்பட்ட ஆளணி | உண்மையான ஆளணி | வெற்றிடங்கள் (மேலதிகம்) |
|---|---|---|---|
| | எண்ணிக்கை | எண்ணிக்கை | எண்ணிக்கை |

| | | | |
|---|---|---|---|
| நிறைவேற்றுத் தரங்கள் | 1,173 | 630 | 543 |
| ஆதரவு பதவியினர் மற்றும் சிற்றூழியர் தரங்கள் | 26,047 | 23,851 | 2,196 |
| ஏனையோர் (அமைய/ தற்காலிக) | 1,109 | 696 | 413 |
| | 28,329 | 25,177 | 3,152 |

பொதுத்திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் பிராந்திய ஆணையாளர்களின் ஆட்சேர்ப்புக்கான ஆளணியை அங்கீகரித்திருக்காத போதிலும் சபையால் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் சம்பளங்களாக ரூபா 861,540 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பாடசாலை பதவியணி

| **வகுதி** | **அங்கீகரிக்கப்பட்டவை** | **உண்மையானவை** | **வெற்றிடங்கள் (மேலதிகம்)** |
|---|---|---|---|
| | **எண்ணிக்கை** | **எண்ணிக்கை** | **எண்ணிக்கை** |
| அதிபர் தரங்கள் | 1,129 | 604 | 525 |
| ஆசிரியர் தரங்கள் | 13,984 | 13,003 | 981 |
| சிற்றூழியர் தரங்கள் | 1,222 | 598 | 624 |
| ஏனையோர்- கல்விசாரா | 905 | 659 | 246 |
| | 17,240 | 4,864 | 2,376 |

(i) பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் தோட்டக்காரர்கள், தொழிலாளர்கள், கணிதவள நிலையத்திற்கான உத்தியோகத்தர்கள், போதனாசிரியர்கள், ஆசிரிய நிலைய முகாமையாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிற்கான

பதவியணியை அங்கீகரித்திருக்கவில்லை. எனினும், அந்தப் பதவியணி வகுதிகளிற்கு 36 எண்ணிக்கையானோர் ஆளணி அங்கீகாரமின்றி ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ii) 468 ஆசிரியர்கள் அதிபர்களாக பணிக்குசேர்க்கப்பட்டிருந்தார் இது தொடர்பாக, வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.9.2 ஒழுங்கற்ற நியமனங்கள் மற்றும் வேதனங்கள்

மாகாண சபைக்கான அதிகமான நியமனங்கள் முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையைப் பின்பற்றாது எழுந்தமான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் குறித்த சில நியமனங்கள் முழுத் தீவிற்குமான சேவைகள் அல்லது மாகாண அரச சேவைகளிற்கு பொருந்தமான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் நோக்கெல்லைகள் அதிகார எல்லைகளிற்கிடையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இவை தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 மே 11 ஆம் திகதிய 09/2007 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபத்திற்கு முரணாக மீள நியமனம் பெற்ற ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களிற்கு சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பாக ரூபா 3.3 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், இந்த விடயம் 2011 இற்கான எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,360,959 ஆன மேலதிக கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்ரல்லாத நான்கு பேர்கள் இலங்கை நிருவாக சேவையின் வெற்றிடமான பதவிகளிற்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

(இ) அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாது சட்ட ஆலோசகர் உட்பட ஒன்பது ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களிற்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவின் பிரகாரம் பொது விளம்பரங்களைப் பின்பற்றாது முப்பது எண்ணிக்கையான இளைப்பாறிய உத்தியோகத்தர்கள் மீள் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

(உ) மாகாணத்தில் அதிக அனுபவத்துடன் கூடிய சிரேஷ்ட கணக்காளர்கள் இருந்த போதிலும் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் அதிகமானவை பிரதம கணக்காளர்களாக குறைந்த அனுபவமுடைய கணக்காளர்களை நியமித்திருந்தன. அதன் விளைவாக அந்த அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் சிறந்த நிதிக்கட்டுப்பாடு மற்றும் நிதி ஒழுங்கு என்பவற்றைப் பிரயோகிக்க முடியாதிருந்தது.

(ஊ) அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் அதிகமானவை முகாமைத்துவ சேவை சேவை வகுப்பு 1 இன் உத்தியோகத்தர்களிற்குப் பதிலாக முகாமைத்துவ சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களை பிரதம முகாமைத்துவ எழுதுனராக நியமித்திருந்தன.

(எ) முகாமைத்துவ உதவியாளர்களில் அதிகமானோர் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களின் பணிகளை மேற்கொள்வதற்குமான பணிகளிற்கு ஒதுக்கப்பட்டிருந்தனர்

(ஏ) இலங்கை கணக்காளர் சேவை தீவடங்கலிற்குமான சேவையாக இருந்த போதிலும் 2007 பெப்ரவரி 11 ஆம் திகதிய எஸ்சீஎவ்ஆர் 320/2003 ஆம் இலக்க வழக்குத் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கருத்திற்கொள்ளாது பல்வேறு உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டில் கணக்காளர்களின் பணிகளை செய்வதற்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

## 2.10 மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மாகாண அமைச்சுக்கள் மற்றும் தினைக்களங்கள் சிலவற்றின் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.10.1 ஆளுனரின் செயலகம்

**(அ) யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பிலுள்ள அலுவலகங்களிற்கான வாடகைக் கொடுப்பனவு**

2011 ஆம் ஆண்டில் ரூபா 61.8 மில்லியன் கிரயத்தில் ஆளுநர் செயலகத்திற்கான அலுவலகக் கட்டிடம் புதிதாக நிருமாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் மாகாண நிதி விதி 420.1 இன் பிரகாரம் பிரதம

விலை மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளாது மீளாய்வாண்டில் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பில் இயங்கிய அலுவலகங்களிற்கான வாடகையாக ரூபா 1,378,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) முற்பணங்களின் தீர்ப்பனவில் தாமதங்கள்**

(i) பல்வேறு நோக்கங்களிற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 7,851,188 கூட்டுத்தொகையான குறியீடுகள் முற்பணங்களின் தீர்ப்பனவு தொடர்பாக 24 சந்தர்ப்பங்கள் 01 தொடக்கம் 05 மாதகால வீச்செல்லையில் குறிப்பிடப்பட்ட கால தாமதங்களாக அவதானிக்கப்பட்டன.

(ii) 08 உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்ட ரூபா 245,000 கூட்டுமொத்தத் தொகையான குறித்த முற்பணங்கள் குறித்த நோக்கங்களிற்காகப் பயன்படுத்தப்படாது பின்னர் முற்றாகத் தீர்க்கப்பட்டிருந்தன. அதன் விளைவாக உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்ட குறித்த முற்பணங்கள் தவறாக கையாளப்பட்டிருக்க முடியும்.

(iii) மாகாண நிதி விதி 219.2 இல குறித்துரைக்கப்பட்ட ரூபா 50,000 ஆகக்கூடிய எல்லைக்கு மேலதிகமாக ஒரு உத்தியோகத்தரிற்கு ரூபா 90,000 ஆன குறித்த முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

**(இ) ஆளுனருக்கு செலுத்தப்பட்ட எரிபொருள் படி**

சனாதிபதி செயலகத்தின் 2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சுற்று நிருபத்திற்கு முரணாக ஆளுநருக்கு ரூபா 438,260 தொடக்கம் ரூபா 487,700 வீச்செல்லை கொண்ட மாதாந்த எரிபொருள்படி செலுத்தப்பட்டிருந்தது. மேலும் சுப்பர் பெற்றோல் மற்றும் சாதாரண பெற்றோல் என்றவாறு அத்தகைய வித்தியாசன அரசாங்க வாகனங்களிற்கு சுப்பர் பெற்றோல் மற்றும் சாதாரண பெற்றோல் வழங்குவதற்கு சுற்றுநிரூபத்தில் ஏற்பாடுகள் இல்லாதிருந்த போதிலும் சுப்பர் பெற்றோலுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆளுனரிற்கு ரூபா 50,000 ஐ விஞ்சி மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் படியில் உ.பொ.செ. வரியும் 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட உ.பொ.செ. திட்டத்தின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பிரயாணப்படிகளின் கொடுப்பனவு**

(i) ஆளுனரின் பிரதான அலுவலகம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளதுடன் உப அலுவலகங்கள் கிளிநொச்சி, வவுனியா, மற்றும் கொழும்பில் அமைந்திருந்த போதிலும் ரூபா 76,750 தொகைக்கான பிரயாணக்கோரிக்கை ஆளுநருக்கு யாழ்ப்பாணத்தில் செலவிடப்பட்ட நாட்களிற்காக செலுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு கடமை நிலையகமாக கொழும்பு உப அலுவலகம் கருதப்பட்டிருந்தமையால் பிரயாணப்படி, கொழும்பிலிருந்து சம்பந்தப்பட்ட வெளியிடங்களிற்குப் செலுத்தப்பட்டிருந்தன என ஆளுநரின் செயலாளர் உரைத்திருந்தார்.

(ii) தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 12 ஆம் பிரிவிற்கு முரணாக ஒரு மாதத்திற்கு ரூபா 30,000 என்ற வீதத்தில் மூன்று அலுவலர்களிற்கு பிரயாணப்படியாக ரூபா 960,000 செலுத்தப்பட்டிருந்தது. மேலும் இந்த உத்தியோகத்தர்களிற்கு அலுவலக வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(iii) தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 12 ஆம் பிரிவிற்கு முரணாக முகாமைத்துவ உதவியாளருக்கு ரூபா 60,000 தொகையான பிரயாணப்படியாக செலுத்தப்பட்டிருந்தது.

**(உ) ஆளுனரின் வருகைக்காக தீவிலுள்ள பல்வேறு ஹோட்டல்களில் தங்குமிட கட்டணங்களின் தீர்ப்பனவு**

தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பிரிவிற்கு முரணாக மாகாண நிதியத்திலிருந்து ஹோட்டல் கட்டணங்களாக ரூபா 141,138 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த வருகைகள் அலுவலகத்திலான அல்லது தனிப்பட்டனவா என புலனாய்வு செய்ததிற்கான சான்றுகள் கிடைத்திருக்கவில்லை. மேலும், ஒரு தனியார் ஹோட்டலில் 2 அறைகளில் 2012 நவம்பர் 05 இல் ஆளுநர் ஒரு நாள் தங்குவதற்காக செலுத்தப்பட்ட ரூபா 79,288 தொகையும் இந்த செலவினத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தெனவும் அவதானிக்கப்பட்டது. மேலும் சிட்டைகளோ அல்லது விலைப் பட்டியல்களோ இன்றி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இவை தொடர்பில், மிகவும் கூடுதல் முக்கியத்துவமான பாதுகாப்பு நிலையை கருத்திற்கொண்டு வேறெங்குமில்லாது இந்த ஹோட்டல்களில் ஆளுநர் தங்கவேண்டியிருந்தது. என்று ஆளுநரின் செயலாளர் உரைத்திருந்தார்.

**(ஊ) வெளிநாட்டு விருந்தினர்களை உபசரிப்பதற்காக செய்யப்பட்ட செலவினம்**

தாபன விதிக்கோவையின் XI ஆம் அத்தியாயத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம், உபசரணை செலவுகள் தேநீர் மதிய உணவு அல்லது இரவு உணவு என்பவற்றுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் விருந்தினராக வரும் அலுவலகர் அவரது துணையார் உடன் வருகை தருவோர் அவர்களின் துணைவர்கள் மற்றும் ஐந்துக்கு மேற்படாத ஏனைய நபர்கள் என்போருக்கு மட்டுப்படுத்தப்பட்ட உறுதிப்படுத்தப்பட வேண்டும்மென்பது குறித்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், திணைக்களத் தலைவர் அமைச்சின் செயலாளரின் முன் அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும். அத்துடன், அங்கீகாரமளிக்கும் அதிகாரி வழங்கப்பட்ட வேண்டிய உபசரணையின் தகைமையையும் அளவையும் நிர்ணயிக்க வேண்டும். மேற்படி, ஏற்பாடுகளிற்கு முரணாக ரூபா 561,005 ஆன உபசரணைச் செலவினம் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(எ) திணைக்களத்தின் குறிக்கோள்களிற்கு புறம்பான செலவினம்**

திணைக்களத்தின் குறிகோள்களிலிருந்து விலகிய கொடுக்கல் வாங்கல்களிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,451,466 கூட்டுமொத்தமான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) பலாலி இராணுவ முகாம் வலயத்தில் இடம்பெற்ற ஞாபகார்த்த நிகழ்வு சம்பந்தமாக தேசிய யுத்த வீரர் நாள் செலவினமாக ரூபா 1,428,798 தொகை காணப்பட்டது.

(ii) சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசாமி கோவிலின் வருடாந்த உற்சவத்தை குறிப்பிடுவதற்காக ரூபா 790,000 ஆன செலவினத்தில் பிரத்தியேக முத்திரைத் தாள்கள் மற்றும் உறைகள் அச்சிடப்பட்டன.

**(ஏ) அங்கீகரிக்கப்படாத கொடுப்பனவு**

முன்னைய ஆண்டு தொடர்பான ரூபா 153,044 கூட்டு மொத்த செலவினம் மாகாண நிதி விதி 166 இன் கீழ் அதிகாரம் பெற்றுக்கொள்ளப்படாது மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஐ) சிட்டைகள் மற்றும் விலைப்பட்டியல்கள் இன்றி மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்**

(i) மாகாண நிதி விதி 107 இற்கு முரணாக விலைப்பட்டியல்கள் பெற்றுக்கொள்ளாது 23 சந்தர்ப்பங்களில் ரூபா 697,921 கூட்டுமொத்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) மாகாண நிதி விதி 107 இற்கு முரணாக தொலைபேசி பட்டியல்கள் பெற்றுக்கொள்ளாது மீளளிப்பாக ரூபா 54,527 கூட்டுமொத்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**(ஒ) அலுவலகப் பாவனைக்காக நலன்புரி விடயங்களை வழங்குவதற்கு செய்யப்பட்ட செலவினம்**

அரசாங்க நிதிகளிலிருந்து அரசாங்க திணைக்களங்களின் உத்தியோகத்தர்களிற்கு நலன்புரி விடயங்களை வழங்குவதற்கான விதிகள் மற்றும் பிரமாணங்களில் உரிய ஏற்பாடுகளில்லாத போதிலும், மீளாய்வாண்டில் அலுவலகப் பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட நலன்புரி விடயங்களிற்காக ரூபா 27,010 தொகை கொண்ட செலவினம் செய்யப்பட்டிருந்தது.

**(ஓ) கணக்காய்விற்காக உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமை**

ரூபா 918,103 பெறுமதியான 20 கொடுப்பனவுச்சீட்டுக்கள் மாகாண நிதி விதி 122 இன் பிரகாரம் ஆளுநர் செயலகத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஔ) பதினைந்தாவது ஆளுநர் மகாநாட்டில் செய்யப்பட்ட செலவினம்**

வட மாகாணத்தில் ஆளுநர்கள் மாநாட்டை நடாத்துவதற்காக மாகாண நிதியிலிருந்து ரூபா 21,547,806 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூபா 21.5 மில்லியன் கிரயத்தில் ஆளுநர்களின் மகாநாட்டை நடாத்துவதற்கு ஆண்டு நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) மகாநாடு தொடர்பாக செய்யப்பட்ட செலவினங்களில் அதிகமானவை இந்தச் செலவினம் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுடன் தொடர்புபட்டிருக்காத போதிலும் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் செலவினத் தலைப்புகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

(iii) கொள்வனவு வழிகாட்டலின் 2.14.1 .ஆம் பிரிவின் பிரகாரம் கொள்வனவு நடைமுறையைப் பின்பற்றாது செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) சனாதிபதியின் செயலாளரால் வழங்கப்பட்ட அரச செலவின் முகாமைத்துவத்திற்கான 2007 பெப்ரவரி 28 ஆம் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க சுற்றுநிரூபத்தின் பிரிவு (iii) இற்கு முரணாக தங்குமிடக் கட்டணங்கள் மற்றும் ஹோட்டல் கட்டணங்களாக மூன்று தனியார் ஹோட்டல்களிற்கு ரூபா 1,024,320 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(v) செலவினத்திற்கான மதிப்பீடுகள் இன்றியும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமலும் பல்வேறு தனியார் தரப்பினருக்கு பெருந்தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன.

(vi) முற்பணக் கொடுப்பனவு
--------------------------------------
யாழ்ப்பாணத்திலுள்ள இரண்டு தனியார் ஹேட்டல்களிற்கு முற்பணமாக ரூபா 7,526,188 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவினத்திற்கான மதிப்பீடுகள் தயாரிக்காமலும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்படாலும் தனியார் ஹோட்டல்களிற்கு முற்பணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) ஆளுநர்கள் மகாநாடு 2012 நவம்பரிலேயே நடை பெற்றிருந்த போதிலும், ரூபா 2,040,000 தொகை முற்பணங்கள் ஆளுநர்கள் மகாநாட்டிற்காக 04 மாதங்களிற்கு முன்னர் 2012 யூலையில் செலுத்தப்பட்டிருந்தது.

(vii) தனியார் ஹோட்டலில் ஆளுநர்கள் மகாநாட்டை ஒழுங்குபடுத்தியமை

சனாதிபதியின் செயலாளரால் வழங்கப்பட்ட அரச செலவின முகாமைத்துவத்திற்கான 2007 பெப்ரவரி 28 ஆம் திகதிய சீஎஸ்ஏ/பீ01/40 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரிவு (iii) இன் பிரகாரம் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மற்றும் அரச நிறுவனங்கள் தமது கூட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் முதலியவற்றை நடாத்துவதற்கு தனியார் ஹோட்டல்களைத் தெரிவு செய்யக்கூடாது. எனினும், பதினைந்தாவது ஆளுனர்கள் மகாநாடு யாழ்ப்பாணத்தில் ஒரு தனியார் ஹோட்டலில் நடாத்தப்பட்டிருந்ததுடன். ரூபா 2,965,943 கூட்டுமொத்தத் தொகையான செலவினம் 30 எண்ணிக்கையான உயர் ஆடம்பர அறைகளிற்கான கட்டணங்கள் மற்றும் சிற்றூண்டி மற்றும் உணவு கலாச்சார நிகழ்வுகள் வகைகள் எனபன உள்ளடங்கலாக இரண்டு நாட்கள் மகாநாட்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும், ஒன்பது மாகாண ஆளுநர்கள் மகாநாட்டில் பங்குபற்றுவதாயிருந்த போதிலும், 30 உயர் ஆடம்பர அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன என்று அவதானிக்கப்பட்டது. காலை உணவு ரூபா 1,450 வீதம் தேநீர் ரூபா 600 வீதம் மதிய உணவு ரூபா 2,600 என்ற விதம் இரவு உணவு ரூபா 2,695 வீதம், ஒத்திகை கட்டணங்கள் ரூபா 300,000 பேருந்து வாடகைக் கட்டணங்கள் ரூபா 60,000 மற்றும் தையற் கட்டணங்கள் ரூபா 54,235 என்ற அபரிதமான விலை வீதங்களை செலவினம் உள்ளடக்கியிருந்தது. இவை தொடர்பில் அதே வித வேறு நிறுவனங்கள் இன்மையால் பாதுகாப்பு விடயங்களை கருத்திற் கொண்டு ரில்கோ சிற்றி ஹோட்டல் தெரிவு செய்யப்பட்டிருந்தது. இந்த தெரிவு கௌரவ ஆளுநரால் அங்கீகரிக்ககப்பட்டதாகும். கௌரவ ஆளுநர்களாக வரிசை அமைச்சுக்களின் விசேட விருந்தினர்கள் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் என்பவற்றிக்கு அவர்கள் இந்த நிகழ்ச்சிக்கென்றே பிரத்தியேகமாக அழைக்கப்பட்டிருந்ததால் அறைகள் பொருத்தமாக ஒதுக்க வேண்டி ஏற்பட்டதுடன் உணவுகள் மற்றும் சிற்றூண்டிகளுடன் உபசரிக்கப்பட்டனர். ஆளுநர் செயலகத்துடன் முன்கூட்டியே ஆலோசித்து

விசேட முக்கிய விருந்தினர்களிற்கான வீவீஜபீ உணவுப் பட்டியல் ஒழுங்கு செய்யப்பட்டதுடன் அத்துடன் அதன் பிரகாரம் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஏனையோர், அதேபோல் உள்ளூரில் அழைக்கப்பட்டோருக்கான உணவுகள் எண்ணிக்கை கட்டுப்படுத்துவதன் மூலம் கட்டுப்படுத்தப்பட்டன. என்று கௌரவ ஆளுநரின் செயலாளர் உரைத்திருந்தார்.

(viii) உலங்கு வானூர்திகள் மூலம் பிரயாணம் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்

தீவுக்கிடையில் பொதுப் போக்குவரத்து கிடைக்கக் கூடியதாக இருந்த போதிலும் தாபன விதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 05 ஆம் பிரிவிற்கு முரணாக தீவிற்கிடையில் உலங்கு வானூர்தி மூலம் பிரயாணம் செய்வதற்காக இலஙகை விமானப்படை (எஸ்எல்ஏஎவ்) தவிர்ந்த தனியார் பிரயாண முகவருக்கு ரூபா 1,462,220 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(ix) ஆளுநர்கள் மகாநாட்டிற்கான விளம்பரச் செலவுகள்**

பதினைந்தாவது ஆளுநர்கள் மகாநாட்டிற்கான விளம்பரச் செலவுகளாக ரூபா 502,872 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ரூபா 479,772 ஆன செலவினம் தலைப்பு இல 422 திட்டமிடல் செயலகத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்ததென்று அவதானிக்கப்பட்டது.

(x) கலாசார நிகழ்ச்சிகளிற்காக மேற்கொள்ளப்பட்ட பொழுது போக்கு செலவினம்

ஆளுநர்கள் மகாநாட்டின் பங்குபற்றுனர்களின் பொழுது போக்கிற்காக 2012 நவம்பர் 15 இல் நடாத்தப்பெற்ற கலாசார நிகழ்ச்சிகளிற்காக மாகாண நிதியிலிருந்து ரூபா 2,103,165 கூட்டு மொத்தச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்கான ஆண்டு நிதிக்கூற்றுக்களில் பாதீட்டு ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) மதிப்பீடுகள், கூறுவிலைகள் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டுக்கள், பங்குபற்றியோர் பட்டியல், வரவேற்பு சிறுமிகள் மற்றும் சிறுவர்களிற்காக தயாரிக்கப்பட்ட ஆடைகளின் இருப்பு என்றவாறான ஆவணச்சான்றுகள் கணக்காய்விற்காக தரப்பட்டிருக்கவில்லை.

(iii) ஆளுநர்கள், மகாநாட்டில் ஒரேயொரு நாள் பயன்படுத்தப்படுவதற்காக பனை ஓலைகளில் செய்யப்பட்ட மரபுரீதியான எண்ணை விளக்கு ரூபா 80,000 கிரயத்தில் செய்யப்பட்டிருந்தது.

(xi) பதினைந்தாவது ஆளுநர்கள் மகாநாட்டிற்கான புத்தகங்களை அச்சிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்

ஆளுநர்கள் மகாநாட்டின் பங்குபற்றியவர்களுக்கிடையில் விநியோகிப்பதற்காக புத்தகங்கள் அச்சிடுவதற்காக மாகாண நிதியிலிருந்து ரூபா 3,626,400 கூட்டு மொத்த செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்கான ஆண்டு நிதிக் கூற்றுக்களில் பாதீட்டு ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆளுநர்கள் மகாநாட்டு ஞாபகார்த்த நூல் வட மாகாண மக்களின் கலாசாரம், வட மாகாணத்தின் விபரமான தோற்றங்கள் வடமாகாணத்தில் விவசாயம் மற்றும் வடக்கின் வசந்தம் ஞபாகார்த்த நூல் என்பவற்றில் 1000 பிரதிகளிற்கு மேல் அச்சிடப்பட்டன.

(iii) தனியார் அச்சகத்தினரிடமிருந்து ரூபா 3.6 மில்லியனிற்கான அச்சிடும் சேவையைப் பெறுவதற்காக கொள்வனவு வழிகாட்டிகளின் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் முறையான கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

### 2.10.2 பிரதம செயலாளரின் செயலகம்

**என்ஈசீஓஆர்டி (நெகோட்) செயற்திட்டத்தின் ஒப்பந்த வேலை தொடர்பான ஒப்பந்தகாரருக்கு மேற்கொள்ளப்பட்ட மத்தியஸ்த கட்டணங்கள் மற்றும் வட்டி என்பன.**

ஒப்பந்தக்காரருக்கும் மாகாண சபைக்குமிடையே எழுந்த முரண்பாடுகள் காரணமாக வவுனியா பொது வைத்திய சாலையில் நான்கு மாடி வெளிநோயாளர் பிரிவு மற்றும் சிகிச்சை நிலைய கட்டிடத் தொகுதியின் நிருமாணத்திற்காக வடக்கு கிழக்கு சமுதாய புனரமைப்பு (என்ஈசீஓஆர்டி) செயற்திட்டம் தொடர்பாக ரூபா 31,947,415 தொகை மத்தியஸ்தம் மற்றும் வட்டிக் கட்டணங்களாக செலுத்தப்பட்டிருந்தது.

ஆண்டு நிதிக்கூற்றுக்களின் படி, என்ஈசீஓஆர்டி செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் வடமாகாண சபையின் அதிகார வரம்பிற்குள் கொண்டு வரப்படவில்லை. எனினும், ஒப்பந்தக்காரர் மற்றும் வடமாகாண சபைக்குமிடையிலான மத்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மாகாண திறைசேரியில் வைப்புச் செய்யப்பட்ட மீளளிக்கத் தேவையற்ற வைப்புச் செய்யப்பட்ட நிதியிலிருந்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மாகாண திறைசேரி மீளளிக்க தேவையற்ற வைப்பிலிருந்து நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் விபரங்கள் பின்வருமாறு.

| கொடுப்பனவின் தன்மை | தொகை<br>ரூபா |
|---|---|
| ஒப்பந்தக்காரரின் கோரிக்கை | 14,674,882 |
| மத்தியஸ்த தீர்ப்பிற்கான மீதிக் கொடுப்பனவு | 2,723,816 |
| பிரதம செயலாளரின் மத்தியஸ்த கட்டணம் | 2,482,181 |
| ஒப்பந்தக்காரின் மத்தியஸ்த கட்டணம் | 3,000,000 |
| ஒப்பந்தக்காரரால் கோரப்பட்ட வட்டிக்கொடுப்பனவு | 7.305,550 |
| பெறுமதி சேர் வரி | 1,760,986 |
| | 31,947,415 |

மேலும் மத்தியஸ்தத்திற்கு முன்னர் ஒப்பந்தக்காரர் ரூபா 14,674,882 தொகையை கோரியிருந்த போதிலும் பிரதம செயலாளரிற்கு எதிரான மத்தியஸ்தீர்ப்பின் அடிப்படையில் ஒப்பந்தக்காரரிற்கு ரூபா 31,947,415 தொகைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததென்று அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக மாகாண சபையின் உத்தியோகத்தர்களின் பங்கிலான நிருவாகக் குறைபாடுகள் காரணமாக ரூபா 17,272.533 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பில் வேலை சம்பந்தமான ஒப்பந்தம் வேலை கொள்வோராக பிரதம செயலாளரால் கைச்சாத்திடப்பட்டது. எனினும், நிறைவேற்றல் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவம் என்பன நெக்கோட் செயற்திட்டத்தில் கடமையாற்றிய உத்தியோகத்தர்களால் செய்யப்பட்டது. எதிர்காலத்தில் வடமாகாணத்தில் வேலைகளின் ஒப்பந்த முகாமைத்துவத்தில் இந்த விதமான நிருவாக குறைபாடுகளை தவிர்ப்பத்கான முக்கிய படிமுறைகளை நாங்கள் எடுத்திருக்கிறோம் என்று பிரதம செயலாளர் உரைத்திருந்தார்.

### 2.10.3 மாகாணத் திறைசேரி

(அ) மாகாணத் திறைசேரி 2002 செப்தெம்பர் 30 ஆம் திகதிய 364(3) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 01 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுமதி சேர் வரிக்காக ஆண்டுப் பாதீட்டில் புறம்பான நிதி ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கவில்லை. ஆகையினால் மாகாண சபையின் பல்வேறு நிறுவனங்களால் வெளித்தரப்பினருக்கு செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியைக் மாகாணத் திறைசேரி கணிப்பீடு செய்ய முடியாதிருந்தது. இதன் விளைவாக ஆண்டு மதிப்பீடுகளில் ஏற்பாடுகளின்றி பெறுமதி சேர் வரியாக மூலதன ஒதுக்கத்திலிருந்து மாகாண சபையால் குறிப்பிடக்கூடிய தொகை செலுத்தப்பட்டிருந்தது

இது தொடர்பில் பெறுமதி சேர் வரி கொடுப்பனவுகள் செலவின விடயம் 2501 இன் கீழ் பீஎஸ்டிஜீ ஏற்பாட்டின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஒதுக்கீடு குறைநிரப்பு செயன்முறையினூடாக சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கு மேற்கொள்ளப்பட்டதாக பிரதம செயலாளர் உரைத்திருந்தார்.

(ஆ) சேவைக்குதவாத 16 வாகனங்களின் ஏலவிற்பனை

விற்பனை செய்யப்பட்ட மாகாண சபைக்கு சொந்தமான பதினாறு வாகனங்கள் இருப்புக் கணிப்புச்சபை அறிக்கையில் பாவனைக்குதவாதவை என சுட்டிக் காட்டப்பட்டிருக்காததுடன் விலை மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 5,095,500 என்ற இழிந்தவிலை தீர்மானிக்கப்பட்டு பொது ஏல விற்பனையினூடாக ரூபா 5,412,232 ஆக அந்த 16 வாகனங்களையும் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த வாகனங்களின் உரித்துடைமை, நிருவாகக் குறைபாடுகள் காரணமாக 15 மாதங்கள் கடந்துவிட்ட போதிலும், கூட வாகனங்களை வாங்கியவர்களுக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. பின்னர் இரண்டு வாகனங்களை வாங்கியோர் உரித்துடமை மாற்றுதல் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்காமைக்காக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் பிரதம செயலாருக்கு எதிராகத் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

(இ) திருமுருகண்டியில் 75 வீடுகள் மற்றும் ஒரு முன்பள்ளியை நிரூமாணிப்பதற்கான கொடுப்பனவு

திருமுருகண்டியில் 75 வீடுகள் மற்றும் ஒரு முன்பள்ளி என்பவற்றை நிருமானிப்பதற்காக மாகாணத் திறைசேரியால் 2012 ஒக்தோபர் 18 இல் கிளிநொச்சி பாதுகாப்புப் படைத்தளபதிக்கு ரூபா 9,500,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்தச் செலவினம், ரூபா 10 மில்லியன் குறைநிரப்பு மதிப்பீட்டுடன் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் தலைப்பு இல 471 இற்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ii) மாகாண நிதிவிதி 787 இன் பிரகாரம், திணைக்களங்களின் சகல நிருமாணங்களும் கட்டிடங்கள் திணைக்களத்திற்குப் பொறுப்பளிக்கப்பட வேண்டும். எனினும், நிருமாண வேலைகளை கொள்வனவு நடைமுறை பின்பற்றப்படாது பாதுகாப்பு படையினரில் பொறுப்பில் விடப்பட்டிருந்தது.

(iii) கிராம சேவகர்களை அல்லது பிரதேச செயலாளருடாக மேற்கொள்ளப்ட்ட நலனாளிகளின் தெரிவுக்குழு உறுதிப்படுத்துவதற்காக சான்றுகளெதுவும் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(iv) நிருமாண வேலைக்கான கொடுப்பனவுகள் மதிப்பீடு மற்றும் அளவீட்டு பட்டியல்கள் என்பன இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(vi) அந்த 75 வீடுகளின் நிருமாணம் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டமையை காட்டும், சான்றுகளெதுவும் தரப்பட்டிருக்கவில்லை. மாகாண திணைக்களத்தால் ஒரு சுதந்திரமான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், பூர்த்திசெய்யப்பட்ட வீடுகளிற்காக பொறியியலாலர் சமர்ப்பிக்கப்பட்ட பூர்த்தியாக்கல் அறிக்கை கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 104 பொறி ஸ்குவரட்றன் எஸ்எல்ஈயின் கட்டளைத் தளபதிக்கு அபிவிருத்தி வேலைகளிற்காக எரிபொருள் வழங்குவதற்கான கொடுப்பனவுகள்

கட்டளைத் தளபதிக்கு எரிபொருள் வழங்கலிற்காக மீளாய்வாண்டில் எரிபொருட் செலவினமாக ரூபா 3,160,814 தொகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வட பிராந்தியத்தில் அபிவிருத்தி வேலைகளிற்காக 104 பொறி ஸ்குவாட்ரன் எஸ்எல்ஈ கட்டளைத் தளபதிக்கு எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. எனினும், மாகாண நிதியிலிருந்து ரூபா 3,160,814 பெறுமதியான எரிபொருளைப் பயன்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகளின் தன்மையை ஆய்வு செய்தற்காக கணக்காய்விற்கு ஆவணச் சான்றுகள் தரப்பட்டிருக்கவில்லை.

(ii) மாகாண நிதி விதி 430 இன் படி பெற்றோல், ஓயில் உராய்வு நீக்கிகள் முதலியன கட்டளைகளில் வழங்கப்பட வேண்டும். ஆனால் ரூபா 3,160,814 பெறுமதியான எரிபொருள் கட்டளைகளின்றி வழங்கப்பட்டிருந்தன.

(iii) கட்டளைத் தளபதியால் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் மூலம் செயற்படுத்தப்பட்ட கிலோ மீற்றர்களின் எண்ணிக்கை மற்றும் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு மற்றும் செலுத்தப்பட்ட எரிபொருள் கிரயத்தின் அடிப்படை என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பில் அந்த நேரத்தில் நிலவிய அவசர மற்றும் அத்தியாவசிய நிலைமையைக் கருத்திற் கொண்டும் மக்களுக்கு குடிநீர் வசதியை வழங்குவதற்காகவும் தீவுப் பிரதேசத்தில் குளங்களின் புதுப்பித்தலை விரைவுபடுத்தும் நோக்கிலும் வலந்தலை குளம் மற்றும் யாழ்ப்பாணக் கோட்டை என்பன புதுப்பிக்கப்பட்டன. சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் ஈடுபட்டதன் மூலம் இந்த செயல்முறை சீராக்கப்பட்டதாக பிரதம செயலாளர் உரைத்திருந்தார்

(உ) தொலைபேசிக் கட்டணங்களின் கொடுப்பனவு

2012 மார்ச் 15 தொடக்கம் 2012 ஏப்ரல் 14 வரையான காலத்தில் 43 செல்லிடத் தொலைபேசிகளைப் பயன்படுத்தியதற்காக ரூபா 157,447 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்களை மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சனாதிபதியின் செயலகத்தினால் வழங்கப்பட்ட 2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் சுட்டிக்காட்டப்பட்ட தொலைபேசி எல்லைகளைக் கருத்திற்கொள்ளாமல் ஆளுநரின் கொத்தணிக்கு ஒதுக்கப்பட்ட ஒரு செல்லிடத் தொலைபேசி பயன்படுத்தியுள்ளதாக ஒரு மாதத்திற்கு ரூபா 75.670 ஆன நேரடி தொலைபேசி அழைப்புக்கள் (ஐடிடி) உள்ளடங்கலாக ரூபா 94,417 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், சம்பந்தப்பட்ட அலுவலகரிடமிருந்து மேலதிக தெகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் தொடர்பான தொலைபேசிச் செலவினம் மாகாணத் திறைசேரியால் செலுத்தப்பட்டிருந்ததுடன் தொலைபேசிச் செலவினத்தின் எல்லைகளைக் கருத்திற்கொள்ளாது பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் வாக்குப்பணத்திற்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எனினும் எல்லைகளை விஞ்சி செலுத்தப்பட்டவற்றை சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் அறவீடு செய்யப்பட்டதா என்பதை கணக்காய்வு செய்வதற்காக சான்றுகளெதும் தரப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ரூபா 42 மில்லியன் சான்றளிக்கப்படாத கொடுப்பனவு

மாகாண நிதி வீதி 107 இன் பிரகாரம் கொடுப்பனவு உறுதிச்சீட்டை சான்றுபடுத்தாது மாகாணத் திறைசேரியால் 8 எண்ணிக்கையான அம்புலன்ஸ்

வண்டிகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 42 மில்லியன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(எ) 25 பிளாஸ்ரிக் கைபிடிக் கதிரைகள் கொள்வனவு செய்து யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு வழங்கியமை

ஆளுநரால் வழங்கப்பட்ட கட்டளையின் அடிப்படையில் 25 பிளாஸ்ரிக் கதிரைகள் கொள்வனவு செய்வதற்காக மாகாணத் திறைசேரியால் ரூபா 105,187 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அவை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் பொது மக்கள் தங்கியிருப்பதற்கு வசதியளிப்பதற்காக ஆளுநரின் பணிப்புரையின் அடிப்படையில் இந்த குறித்த கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது. அது மாகாணத் திறைசேரியின் குறிக்கோள்களிற்கு புறம்பானதாகும். எனினும், 2013 ஆம் ஆண்டிலிருந்து இந்த விதமான நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களால் கையாளப்படுகின்றன. என்று பிரதிப் பிரதம செயலாளர் - நிதி உரைத்திருந்தார்.

### 2.10.4 மாகாணப் பொது நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

**வட மாகாண சபையின் உத்தியோகத்தர்களிற்கான போக்குவரத்து சேவைகளிற்கான ஏற்பாடு**

(i) யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி மற்றும் திருகோணமலைக்கு பிரயாணம் செய்யும் உத்தியோகத்தர்களிற்கு போக்குவரத்து சேவையை வழங்கும் பொருட்டு 2010 ஆம் ஆண்டில் மாகாண சபையால் மூன்று எண்ணிக்கையான பேருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பில் மூன்று பேருந்துகளிலிருந்தும் உத்தியோகத்தர்களிடமிருந்தான வருமானச் சேகரிப்புக்களை விஞ்சி செலவினமாக ரூபா 4,721,336 தொகை மேற்கொண்டிருந்தது.

(ii) மேலும், 2011 ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து கிடைத்த நிதியிலிருந்து ரூபா 32.2 மில்லியன் கிரயத்தில் பத்து எண்ணிக்கையான பேருந்துகள் மாகாண சபையால் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டதுடன் பொதுத் திறைசேரியின் அதிகாரம் பெற்றுக்கொள்ளாது வட பிராந்திய போக்குவரத்து சபைக்கு விநியோகிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் அந்தப் பேருந்துகளின் உரித்துடைமை இரண்டு

ஆண்டுகள் கடந்துவிட்ட பின்னரும் இது வரை மாகாண சபையிடமே உள்ளது. எனவே மாகாணச் சபைக்கு எந்த வித கிரயமும் மேற்கொள்ளப்படாமல் மாகாண சபையின் பதவியினருக்கான போக்குவரத்து சேவையை வழங்குவதற்கு இந்தப் பேருந்துகளை பயன்படுத்துவற்காக வட பிராந்திய போக்குவரத்து சபையுடன் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனவே அந்த 3 பேருந்துகளிற்குமாக செய்யப்பட்ட ரூபா 7.4 மில்லியன் ஆன செலவினம் தவிர்க்கக் கூடிய செலவினமாக கருதப்பட்டது.

(iii) ஊழியர்களின் போக்குவரத்து தொடர்பாக ரூபா 4,721,336 ஆன செலவினம் பதவியணியினர் போக்குவரத்து சேவைக்கான பாதீட்டு ஒதுக்கீடு இன்றி கல்வி அமைச்சு, உள்ளுராட்சி அமைச்சு மற்றும் மாகாண பொது நிருவாக அமைச்சு என்பவற்றின் செலவினத் தலைப்புக்களிற்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

(iv) ரூபா 4.72 மில்லியன் நட்டத்தில் மாகாண சபையின் உத்தியோகத்தர்களின் போக்குவரத்திற்காக 5 பேருந்துகளை ஈடுபடுத்துவத்காகப் நிதி ஆணைக்குழு அல்லது வேறு அதிகாரியிடமிருந்தோ சம்பந்தமான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பில், வட மாகாணத்தில் இ.போ.சபையால் ஒழுங்கான போக்குவரத்து சேவை ஓட்டத்திற்கான ஏற்பாடின்மையால் பதவியினரிடமிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் போதியளவில் இல்லாத போதிலும் கூட அவர்களிடமிருந்து அதிஉச்ச சேவையை பெறும் நோக்கில் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி மற்றும் திருகோணமலைக்கு உத்தியோகத்தர்கள் பிரயாணம் செய்வதற்காகப் வடமாகாண சபை போக்குவரத்து சேவையை வழங்குகின்றது என்று பிரதம செயலாளர் உரைத்திருந்தார்.

### 2.10.5 மாகாண அரச சேவை ஆணைக்குழு

தலைவர் தீவுக்கு வெளியே இருந்த 2012 யூலை தொடக்கம் 2012 செப்தெம்பர் வரையான 03 மாத காலத்தில் ஆட்சிக் குழுக் கூட்டங்களில் பங்குபற்றியிருக்காத மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் தலைவருக்கு படியாக ரூபா 105,000 செலுத்தப்பட்டிருந்தது. இந்த விடயம் 2012 திசெம்பர் 17 ஆந் திகதியில் வழங்கப்பட்ட எனது கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் தலைவருக்கு மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கற்ற கொடுப்பனவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.10.6 கல்வி அமைச்சு**

அமைச்சின் குறிக்கோள்களிற்கு புறம்பானதாக கருதப்பட்ட பின்வரும் ரூபா 4.47 மில்லியன் செலவினம் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

| செலவின விபரம் | தொகை |
|---|---|
| | ரூபா |
| ஆளுநர்கள் மகாநாட்டு செலவினம் | 2,064,758 |
| யுத்த வீரர்கள் தினம் | 341,780 |
| மாகாணசபை பதவியணியினரின் போக்குவரத்திற்கான எரிபொருள் செலவினம் | 2,068,300 |
| | 4,474,838 |

**2.10.7 மாகாண கல்வித் திணைக்களம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) குறித்த மானியங்களின் பயன்பாடு**

2012 திசெம்பரில் மாகாணத் திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 195 மில்லியன் தொகை குறித்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தன.

| நிதிகளின் வகை | தொகை |
|---|---|
| | ரூபா |
| மாகாண குறித்த அபிவிருத்தி மானியங்கள் | 63,410,994 |
| நவோதய | 675,000 |
| ஐக்கிய நாடுகள் சிறுவர் அபிவிருத்தி நிதியம் (யுனிசெவ்) | 35,856,698 |
| மாற்றத்திற்காக பாடசாலைக் கல்வி உப செயற்திட்டம் (ரீஎஸ்ஈபீ) | 95,165,075 |
| | 195,107,767 |

**(ஆ) கடமைகளின் பொருத்தமற்ற ஒதுக்கீடு**

உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்காக 126 எண்ணிக்கையான வெற்றிடங்கள் இருந்த போதிலும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அதிபர் தர உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர்கள் கடந்த பல வருடங்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் பணிக்களைக் கவனிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தனர் என்று அவதானிக்கப்பட்டது.

**(இ) புத்தளம் மாவட்டத்தில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்களிற்கான சம்பளக் கொடுப்பனவு**

இந்தப் பதவியணி உறுப்பினர்கள் வடமாகாண சபையில் பணியாற்றியிருக்காத போதிலும், மீளாய்வாண்டில் 169, ஆசிரியர்கள் மற்றும் 16 அலுவலக ஊழியர்களிற்கு மாகாண நிதியிலிருந்து சம்பளங்களாக, ரூபா 57.9 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஆனால் வடமேல் மாகாண சபையின் அதிகார வரம்பிற்குள் மாவட்டம் உள்ள போதிலும் புத்தளம் மாவட்டத்தில் இருக்கும் ஆறு பாடசாலைகளில் இவர்கள் கடந்த பல ஆண்டுகளாக பணியாற்றியிருந்தனர்.

**(ஈ) கட்டு நிதிக் கணக்கு**

(i) மாகாண நிதி விதி 219 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக பதவி நிலை சார தரத்திலுள்ள 07 உத்தியோகத்தர்களிற்கு 12 சந்தர்ப்பங்களில் ரூபா 186,740 மொத்தத் தொகையான குறித்த நோக்க உப கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன.

(ii) மாகாண நிதி விதி 219 இன் ஏற்பாடுகளிற்கு முரணாக நோக்கம் பூர்த்தியாக்கப்பட்டு 9 மாதங்களின் பின்னரே கட்டுநிதிகள் தீர்க்கப்பட்டிருந்தன.

(iii) மாகாண நிதி விதி 219 (2) இன் பிரகாரம் பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு உப கட்டுநிதிகள் ஒரு சந்தர்ப்பத்தில் ஆகக் கூடுதலாக ரூபா 50,000 வழங்கப்பட முடியும், எனினும் விதிகளிற்கு முரணாக எல்லையை விஞ்சி ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு

உத்தியோகத்தருக்கு ரூபா 200,000 தொகை உப கட்டுநிதி செலுத்தப்பட்டிருந்தது.

**(உ) ஆசிரியர்களைப் பணியிலீடுபடுத்தல்**

குறித்த பாடங்களிற்காக பாடசாலைகளிலுள்ள வெற்றிடங்களிற்கிணங்க ஆசிரியர்கள் முறையாக பணியிலிடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக சம்பந்தப்பட்ட பாடங்களிற்கு சில பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது அந்தப் பாடங்களிற்காக சில பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர் இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. ஆசிரியர்களின் முறையற்ற பணிக்கமர்த்தல் காரணமாக கா.பொ.த சாதாரண மற்றும் உயர்தர பரீட்சைகளின் செயலாற்றல் எய்தப்பட்டிருக்கவில்லை. பாடங்களிற்கான வெற்றிடங்களிற்கிணங்க முறையாக ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தால் சிறந்த செயலாற்றலை எய்திருக்க முடியும்.

**(ஊ) ரூபா 210,240 ஆன மேலதிகக் கொடுப்பனவு**

கிளிநொச்சி சென்ற் திரேசா மகளிர் கல்லூாயீல் வகுப்பறைகளை நிரூமாணிப்பதற்காக சொல்லப்பட்ட அளவுகளை விஞ்சி கட்டிடப் பொருட்களை மேலதிக அளவுகளில் கொள்வனவு செய்தமை காரணமாக ஒப்பந்தக்காரருக்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 210,240 ஆன மேலதிகக் கொடுப்பனவை கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கிளிநொச்சி சென்ற் தேரேசா மகளிர் கல்லூரியில் நிருமாணிக்கப்பட்ட வகுப்பறைக் கட்டிட மேற்பார்வைக் கட்டணமாக கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு ரூபா 99,747 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், மேற்கொள்ளப்பட்ட மேற்பார்வை தொடர்பான செய்யப்பட்ட வேலையை நிருபிக்கதக்க சான்றுகளெதுவும் கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்கவில்லை.

(ஏ) கல்வி அமைச்சின் 2013 மே 22 ஆந் திகதிய 23 ஆம் இலக்க சுற்று நிரூபத்திற்கு முரணாக கிளிநொச்சி சென்ற்தெரேசா மகளிர் கல்லூரியில் மாணவிகளிடமிருந்து அனுமதிக் கட்டணங்களாக ரூபா 1,075,850 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது.

**(ஐ) 240 பாடசாலை மாணவர்களிடமிருந்து அனுமதிக் கட்டணமான ரூபா 2.4 மில்லியன் சேகரிப்பை மோசடி செய்தமை**

கணக்காய்விற்குக் கிடைத்த சான்றுகளின் படி கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட சுற்று நிரூபத்திற்கு முரணாக மீளாய்வாண்டில் யா/இந்து ஆரம்ப பாடசாலையில் 240 மாணவர்களிடமிருந்து ரூபா 2.4 மில்லியன் தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. மேலும், சேகரிக்கப்பட்ட அந்த ரூபா 2.4 மில்லியன் பணம் பாடசாலையாலோ அல்லது பாடசாலை அபிவிருத்தி சங்கத்தாலோ பேணப்படும் வங்கிக் கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. என்று அவதானிக்கப்பட்டது. அதன் விளைவாக சேகரிக்கப்பட்ட ரூபா 2.4 மில்லியன் பணம் சேகரிக்கப்பட்ட பணத்திலிருந்து செலவினம் எதுவும் செய்யப்பட்டதற்கான சான்றுகளெதுவும் கணக்காய்விற்கு தரப்படாமையால் தவறாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 2.10.8 மாகாண விளையாட்டுத் திணைக்களம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்திற்கு எந்தவித நன்மையும் பெறப்படாமல் சிக்கனமற்ற முறையில் பின்வரும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையை கணக்காய்வு தெரிவுச் செவ்வை வெளிப்படுத்தியது

| செலவின விபரம் | தொகை |
|---|---|
| | ரூபா |
| வர்ண இரவு ஒளியூட்டல் | 36,250 |
| மகளிர் சேலைகள் | 18,000 |
| ஆளுனரின் பதவியணியினருக்காக செய்யப்பட்ட விளையாட்டுப் பொருட்கள் கொள்வனவு | 7,350 |
| புத்தாண்டு வரவேற்பு | 4,200 |
| ஆண்டிறுதி கூட்டத்திற்கான சிற்றூண்டி | 9.500 |
| | 75,300 |

(ஆ) திணைக்களத்தின் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருக்காத செலவினமான 225 துவிச்சக்கர வண்டிகள் விநியோகத்திற்காக திணைக்களத்திற்கு ரூபா 229,000 ஆன செலவினம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

**2.10.9 மாகாண கட்டிடங்கள் திணைக்களம்**

(அ) இரத்மலானையில் வட மாகாணத்தின் சுற்றுலாவிடுதிக்கான மூலதனச் செலவுகளாக ரூபா 1,669,855 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்தச் செலவின விடயம் கட்டிடங்கள் திணைக்களத்தின் அதிகார எல்லையின் கீழ் இல்லாத போதிலும் அது கட்டிடங்கள் திணைக்களத்தின் மீண்டுவரும் வாக்கு பணத்திற்கு (461 – 15 – 4 – 1303) தவறூலாக தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஆளுநர் செயலகத்திற்கான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு தொடர்பான ரூபா 1,751.582 ஆன செலவினம் மீளாய்வாண்டில் பொது வைப்புக் கணக்கிற்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. மேலும் ஆளுநர் செயலகத்திற்கான தளபாடங்கள் கொள்வனவிற்காக ரூபா 7 மில்லியன் தொகையான அதே தன்மையான செலவினம் முன்னைய ஆண்டிலும் மாகாண கட்டிட திணைக்களங்களிற்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததென்றம் அவதானிக்கப்பட்டது.

(இ) ஆளுநர்கள் மகாநாடு தொடர்பான ரூபா 98,662 ஆன செலவினம் சம்பந்தப்பட்ட அதிகாரத்திடமிருந்தான அங்கீகாரமின்றி கட்டிடங்கள் திணைக்களத்தின் செலவின விடயத்திற்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

**2.10.10 உள்ளூராட்சித் திணைக்களம்**

**கிளிநொச்சி சந்தைக் கட்டிடத் தொகுதியில் தற்காலிக கடைகளின் நிருமாணம்**

தற்காலிகக் கடைகள் ரூபா 3,616,490 கிரயத்தில் நிருமாணிக்கப்பட்டிருந்ததுடன் உளளூராட்சித் திணைக்களத்தின் செலவின விடயம் 471 – 60 – 4 – 1303) இற்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. மேலும், இந்தச் செலவினம் மூலதனத் தன்மையுடையதாக இருந்ததுடன் உள்ளூராட்சி சபைகளுக்கு தொடர்புபட்டதாக இருந்ததென அவதானிக்கப்பட்ட போதிலும் கட்டிடங்கள் திணைக்களத்தால் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. செலவின விடயம் இல 471 – 60-4-2202 இற்குப் பதிலாக தவறுதலாக 471 – 60 – 4 – 1303) என்ற மீண்டுவரும் செலவின விடயத்திற்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

### 2.10.11 சுதேச மருத்துவத் திணைக்களம்

(அ) பொது மக்களுக்கு சேவை செய்வதற்காக உள்ளூராட்சித் சபைகளின் கீழ் செயற்படும் என்பத்திநான்கு ஆயுர் வேத நிலையங்கள் போதிய மேற்பார்வை இன்றியும் போதிய மருந்துகள் வழங்கப்படாமலும் செயற்பட்டிருந்தன.

(ஆ) சுதேச மருத்துவத் திணைக்களம் ஆயுர் வேத மருத்துவத்தை அபிவிருத்தி செய்வதற்காகவும் மூலிகைத் தோட்டத்தை நிறுவி பராமரிப்பதற்காகவும் சுகாதார அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டது. எனினும் தனியார் வியாபாரிகள் மற்றும் ஆயுர் வேத கூட்டுத்தாபனம் என்போரிடமிருந்து மருந்துகளைக் கொள்வனவு செய்தமைக்காக அண்ணளவாக ரூபா 1,597,943 தொகை செலவினம் செய்யப்பட்டிருந்தது.

### 2.10.12 சுகாதாரத் திணைக்களம்

வைத்தியர்கள் மற்றும் ஆதரவுப் பதவியணியினரின்மை காரணமாக சில வைத்திய சாலைகளில் கட்டிடங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களில் அதிகமானவை பயனற்றிருந்தன. ஆகையால் இந்தக் கட்டிடங்கள் மற்றும் உபகரணங்களிற்கு செய்யப்பட்ட செலவினம் பயனற்றவை என கருதப்பட முடியுமென்பதுடன் இந்தச் செலவினத்திலிருந்தான நன்மைகள் பொது மக்களுக்கு கிடைத்திருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| சுகாதார அலுவலகத்தின் வைத்திய அலுவலர் | நிறுவனங்களின் எண்ணிக்கை | இருக்கும் மருத்துவ உத்தியோகத்தரின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட ஆளணி |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 42 | 30 | 99 |
| முல்லைத்தீவு | 09 | 18 | 55 |
| கிள்நொச்சி | 13 | 22 | 62 |
| மன்னார் | 16 | 44 | 89 |
| வவுனியா | 11 | 108 | 94 |
| | 91 | 222 | 399 |

வடமாகாணத்தில் இருக்கும் பல் வைத்திய சாலைகளின் எண்ணிக்கை 61 ஆக இருந்த அதே சமயம் பற் சிகிச்சை நிலையங்களிற்கான அனுமதிக்கப்பட்ட ஆளணி 27 மாத்திரமேயாக இருந்தமையால் பல வைத்தியசாலைகளிற்கான ஆளணியின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **பற்சிகிச்சை நிலையங்களின் மருத்துவ அலுவலர்** | **வைத்தியசாலைகளின் எண்ணிக்கை** | **இருக்கும் பல் மருத்துவர்களின் எண்ணிக்கை** | **அனுமதிக்கப்பட்ட ஆளணி** |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 26 | 18 | 09 |
| முல்லைத்தீவு | 06 | 05 | 03 |
| கிள்நொச்சி | 09 | 05 | 04 |
| மன்னார் | 10 | 08 | 04 |
| வவுனியா | 10 | 10 | 07 |
| | 61 | 46 | 27 |

(i) மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் (ஆர்டிஎச்எஸ்) பிரிவுகளில் உள்ள ஒவ்வொரு வைத்திய சாலைகளிலும் ஒரு மருத்துவ ஆலோசகர் இருக்க வேண்டும். எனினும், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமாகாண வைத்திய சாலைகளிற்கு தேவைப்பட்ட 51 மருத்துவ ஆலோசகர்களில் 11 மருத்துவ ஆலோசகர்கள் மட்டுமே இருந்தனர்.

(ii) வடமாகாணத்தில் 1011 பாடசாலைகள் இயங்கி வருகின்ற போதிலும் வட மாகாணத்தில் 15 பாடசாலை பற்சிகிச்சை பிரிவுகள் மாத்திரமே இயங்கியிருந்தன.

(iii) 5 ஏக்கர் பரப்பளவில் உள்ள பூநகரி பிரதேச வைத்தியசாலைக்குச் சொந்தமான கட்டிடம் பாதுகாப்பு படையினரால் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக சுகாதார நோக்கங்களிற்காக இந்தக் கட்டிடத்தைப் பயன்படுத்துவதற்கு உரிய அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ஆர்டிஎச்எஸ் இன் கீழ் இயங்கும் பல்வேறு வைத்தியசாலைகளிலும் குறிப்பிடத்தக்களவு காலாவதியான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன. இது சம்பந்தமாக இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(எ) போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள் - ரூபா 1,215,400**

பின்வரும் செலவினங்களிற்கான நிதி ஒதுக்கீடுகள் ஆண்டு நிதிக் கூற்றுக்களில் (பாதீடு) மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்தக் கொடுக்கல் வாங்கல்கல்கள் சம்பந்தப்பட்ட அதிகாரங்களிடமிருந்து பெறப்பட்ட போதிய ஆதாரங்களால் ஆதாரப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.

| **கொடுப்பனவின் தன்மை** | **தொகை** |
|---|---|
| | **ரூபா** |
| சுகாதார வாரத்திற்கான சேட்டுக்களின் மற்றும் தொப்பிகளிற்கான கொடுப்பனவு | 357,500 |
| வீரசிங்கம் மண்டபத்திலிருந்து வாயுக் குளிருட்டிகளை வைத்திய சாலைகளில் மீளப்பொருத்துவதற்கான கொடுப்பனவு | 546,100 |
| 30 புத்தகங்களை அச்சடிப்பதற்கான கொடுப்பனவு | 73,800 |
| 200 துண்டுப்பிரசுரங்களை அச்சடிப்பதற்கான கொடுப்பனவு | 46,000 |
| 600 மாதக் கலண்டர்களை அச்சடிப்பதற்கான கொடுப்பனவு | 192,000 |
| | 1,215,400 |

---

**2.10.13 யாழ்ப்பாணம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பின்வரும் வைத்தியசாலைகளிற்கான முழு மற்றும் அரை உணவுக்கான விலை வீதங்கள் ஒப்பந்தக்காரர்களாலேயே தீர்மானிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் தொழில்நுட்ப மதிப்பாய்வுக்குழு விலை வீதங்களைப் பகுப்பாய்வு செய்யவில்லை. இதன் விளைவாக குறிப்பிடத்தக்க தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **விபரங்கள்** | **அளவெட்டி**<br>**முழு மற்றும் அரை உணவுக்கான விலை வீதம்**<br>**ரூபா** | **மானிப்பாய்**<br>**முழு மற்றும் அரை உணவுக்கான விலை வீதம்**<br>**ரூபா** |
|---|---|---|
| புதிய மீன் | 180 | 140 |
| மாட்டிறைச்சி | 180 | 140 |
| கருவாடு | 180 | 140 |
| மரக்கறி | 180 | 140 |
| முட்டை | 180 | 140 |

**2.11 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) பயனற்ற மற்றும் குறை பயன்பாட்டு பௌதீக வளங்கள்**

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு மீளாய்வாண்டில் மாகாண சபையின் பௌதீக வளங்கள் பயனற்ற அல்லது குறை பயன்பாட்டுடன் இருந்தன.

| | **சொத்துக்களின் தன்மை** | **விபரம்** | **பெறுமதி**<br>**ரூபா** |
|---|---|---|---|
| (i) | கட்டிடங்கள் | 85 அரச விடுதிகள் | பெறுமதி தரப்படவில்லை |
| (ii) | வாகனங்கள் | 04 பிக்கப் வாகனங்கள் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | 10 மோட்டார் சைக்கிள்கள் | - மேற்படி - |
| (iii) | இயந்திரங்கள் | 02 மின்பிறப்பாக்கிகள் | - மேற்படி - |
| | | 53 கணணிகள் | - மேற்படி - |
| | | 226 கணணி உபபாகங்கள் | - மேற்படி - |
| (iv) | அலுவலக உபகரணங்கள் | 70 பிளாஸ்ரிக் கதிரைகள் | - மேற்படி - |
| | | 126 தளபாட விடயங்கள் | - மேற்படி - |
| (v) | நோயாளர் கட்டில்கள் | வட்டகச்சி வைத்தியசாலையில் 70 | - மேற்படி - |
| (vi) | கட்டில்கள், கதிரைகள், மெத்தைகள் முதலியன | கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் 198 | 1,555,500 |

(ஆ) சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு

(i) கீழே காட்டப்பட்டவாறு 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 53,228,247 பெறுமதியான சொத்துக்கள் ஏட்டுப் பெறுமதியில் கணிப்பிடப்பட்டிருந்ததுடன் பௌதிக மெய்மையாய்வு கணிப்புச் சபை அறிக்கைகளால் ஆதாரப்படுத்தப்படவில்லை.

| | தொகை<br>ரூபா |
|---|---|
| 1 கால்நடைப் பண்ணைகளின் பராமரிப்பு | 47,442,801 |
| 1 புடைவைக் கைத்தொழில் | 5,785,446 |
| | 53,228,247 |

(ii) 2012 ஆம் ஆண்டிற்கான கணிப்புச் சபை அறிக்கைகளின்படி 13 திணைக்களங்களில் 236 விடயங்கள் மேலதிகம் என்று

அறிக்கையிடப்பட்ட அதே நேரம் 3 வாகனங்களுட்பட 118 விடயங்கள் குறைவாக இருந்ததென அறிக்கையிடப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக, கணிப்புச் சபையால் அறிக்கையிடப்பட்ட குறைவுகள் மற்றும் மேலதிகங்களிற்கு மாகாண நிதிவிதி 68 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.12 இனங்காணப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்னார், சுகாதார சேவைகள் பிரதி மாகாண பணிப்பாளருக்கு சொந்தமான ஒரு அம்புலன்ஸ் வாகனம் 2003 திசெம்பர் 03 இல் விபத்தை அடைந்திருந்தது. வாகனத்தின் திருத்தக் கிரயம் ரூபா 695,700 ஆகும். விபத்துக்கான பொறுப்பைத் தீர்மானிப்பது தொடர்பான விசாரணைகள் நடாத்தப்பட்டிருக்காததுடன் இந்த நட்டம் சம்பந்தமான அறிக்கை மாகாண நிதி விதி 104 இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்வி அமைச்சிற்குச் சொந்தமான ஒரு வாகனம் 2011 யூன் 11 இல் விபத்தில் சிக்கியிருந்ததுடன் ரூபா 1,368,564 ஆன திருத்தக் கிரயம் தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் ரூபா 1,036,344 கிரயம் மாத்திரம் காப்புறுதிக் கம்பனியால் மீளளிக்கப்பட்டிருந்தது. மீதி ரூபா 322,220 மாகாண நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் மா.நி.வி 104 இன் பிரகாரம் பொறுப்பை தீர்மானிப்பதற்கு விசாரனைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 1999 தொடக்கம் 2011 வரை ஏற்பட்ட ரூபா 56,418,312 தொகையான நட்டங்கள் தொடர்பாக மா.நி.வி 70(5) இன் பிரகாரம் இறுதி அறிக்கைகள் 5 மாகாண திணைக்களங்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | **தொகை** |
|---|---|
| | **ரூபா** |
| கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | 17,554,713 |
| நீர்ப்பாசனத் திணைக்களம் | 22,794,842 |
| சுகாதார அமைச்சு | 13,142 |
| சுகாதாரத் திணைக்களம் | 9,644,965 |
| கைத்தொழிற் திணைக்களம் | 6,410,650 |
| | 56,418,312 |

## 2.13 வாகனங்களின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தரப்பட்ட தகவல்களின்படி மாகாண சபையில் இருக்கும் வாகனங்களின் மொத்த எண்ணிக்கை 603 ஆக இருந்தது. அதே நேரம் பணிக்கமர்த்தப்பட்ட சாரதிகளின் எண்ணிக்கை 400 இற்கும் குறைவடைவானதாகவே இருந்தது. இந்த சாரதிகளின் பாரிய பற்றாக்குறை காரணமாக பல்வேறு திணைக்களங்களிற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து சாரதிகள் பெற்றிருந்தனர்.

(ஆ) வடமாகாணத்தில் இருக்கின்ற 85 அம்புலன்ஸ் வாகனங்களில் 07 அம்புலன்ஸ்கள் நான்கு ஆண்டுகளிற்கும் மேலான காலமாக திருத்தங்கள் செய்யப்படாது பயன்பாடினிற்றி விடப்படடிருந்தன. இந்த வாகனங்கனைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சில திணைக்களங்கள் மீளாய்வாண்டில் மாகாண நிதி விதி 433 இன் பிரகாரம் உரிய திகதிகளில் கணக்காய்விற்கு தமது அலுவலக வாகனங்கள் தொடர்பான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த செயலாற்றல் பொழிப்புக்களைச் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஈ) மன்னார், வவுனியா, கிளிநொச்சி, மற்றும் முல்லைத்தீவு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்களால் அதிகமான வாகனங்கள் திருத்துவதற்காக

ஒன்று தொடக்கம் ஐந்து ஆண்டுகள் வீச்செல்லை கொண்ட காலமாக வாகனம் திருத்தும் நிலையங்களிற்கும் கையளிக்கப்பட்டிருந்தன.

(உ) முன்னைய ஆண்டுகளில் நிகழ்ந்த நான்கு அம்புலன்ஸ் வாகனங்கள் தொடர்பான நட்டத்திற்கான திணைக்கள நடவடிக்கைகளை 2013 திசெம்பர் 31 வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நாளாந்த ஓட்ட அட்டவனைகள் முறையாகப் பேணப்பட்டிருக்காததுடன் பிரயாணங்களிற்கான அலுவலக நோக்கங்கள் மா.நி.வி 433 இன் பிரகாரம் சில அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் நாளாந்த ஓட்ட அட்டவனைகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

(எ) வாகனங்களின் திருத்தம் - ரூபா 8,378,296

சனாதிபதி செயலகத்தின் 2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சுற்றுநிரூபத்தின் படி, ஆளுநர் செயலகத்திற்கு இணைக்கப்பட்டிருக்க வேண்டிய வாகனங்கள் 07 ஆகும். எனினும், 20 வாகனங்களிற்கு மேல் மீளாய்வாண்டில் ஆளுநர் செயலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்தன. மேலும், மீளாய்வாண்டில் 17 வாகனங்களிற்கு ரூபா 8,378,296 கிரயத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தன என்று அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(i) கொள்வனவு வழிகாட்டிகளின் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் வாகனங்களின் திருத்தங்களிற்கு கொள்வஎனவு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) 2010 செப்தெம்பர் 06 ஆம் திகதிய கொள்வனவு வழிகாட்டிகளின் பிரகாரம் ரூபா 200,000 மேற்பட்ட செலவினம் செய்வதற்கான அனுமதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) அரச நிருவாக அமைச்சின் 1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 41/91 ஆம் இலக்க சுற்றுநிரூபத்தின் பிரகாரம் இயந்திரவியல் பொறியியலாளரிடமிருந்தான சான்றிதழ் திருத்தங்களிற்கான கொடுப்பனவிற்கு முன்னர் பெறப்பட்டிருக்கவில்லை.

(iv) மா.நி.வி 107 இற்கு முரணாக 15 சந்தர்ப்பங்கனில் விலைப்பட்டியல் பெற்றுக்கொள்ளாது வாகன திருத்தங்களிற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(v) 14 புதிய வாகனங்களிற்கு ரூபா 110,532 தொடக்கம் ரூபா 1,306,840 வரை வீச்செல்லை கொண்ட கிரயத்தில் பாரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iv) மா.நி.வி 107 இன் பிரகாரம் விலைப்பட்டியல் பெற்றுக் கொள்ளாது ஒரு வாகனத்தின் திருத்தங்களிற்காக ரூபா 511,790 ஆன கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**2.14 கொள்வனவுகளில் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 இன் கொள்வனவு வழிகாட்டல்களின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் பல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மீளாய்வாண்டிற்கான பிரதான கொள்வனவுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மற்றும் கேள்விதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கூறு விலைகள் என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் கணக்காய்வில் கொள்வனவுகளிற்கான செலவினத்தை பரீட்சிக்க முடியாதிருந்தது.

(இ) கொள்வனவு வழிகாட்டல்களின் 2.5 ஆம் பிரிவின்படி கொள்வனவுக் குழுவில் மூன்று உறுப்பினர்கள் இருக்க வேண்டும். ஆனால் கொடுப்பனவுகள் 3 இற்கு மேற்பட்ட உறுப்பினர்களிற்கு மேற்கொள்ளப்பட்டிருந்தன. கொள்வனவுக் கைநூலின் 2.9.1 ஆம் பிரிவின் படி, கொள்வனவுக் குழுவின் கூட்டங்கள் அலுவலக நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களில் நடாத்தப்பட வேண்டும். எனினும், கொள்வனவுக் குழுவின் சகல கூட்டங்களும் அலுவலக நேரத்திலேயே நடாத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2006 இன் கொள்வனவு வழிகாட்டிகளின் 164.1 ஆம் பிரிவின் பிரகாரம் அவர்களின் நிதிசார் மற்றும் பௌதீக இயலுமையைக் மதிப்பாய்வு செய்யாது, வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிற்கு நிருமாண வேலைகள் வழங்கப்பட்டிருந்தன.

(உ) மாகாண சபையில் பதிவு செய்து கொள்ளாத வழங்குனர்களிடமிருந்து பல கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஊ) ரூபா 11,800,000 இற்கு கல்வனைஸ்ட் இரும்பு கூரைத் தகடுகளின் கொள்வனவு

மீளாய்வாண்டில் மீளக் குடியேற்றப்பட்ட மக்களின் பயன்பாட்டிற்காக 12,000 கல்வனைஸ்ட் இரும்புக் கூரைத்தகடுகள் கொள்வனவு செய்வதற்காக மாகாணத் திறைசேரியால் ரூபா 11,800,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புசுக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆண்டு மதிப்பீட்டில் பாதீட்டு ஏற்பாடு மேற்கொள்ளப்படாதமையால் மாகாணத் திறைசேரி குறைநிரப்பு ஏற்பாடுகளினூடாக இந்தக் கொடுப்பனவுகளை செய்திருந்தது.

(ii) கொள்வனவு வழிகாட்டிகளின் 2.14.1 ஆம் பிரிவிற்கு முரணாக ஐந்து கூறுவிலைகள் பெறப்பட்டிருக்க வேண்டிய போதிலும் ஒரு கூறு விலையின் அடிப்படையில் கொள்வனவுத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு, கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) உரிய மூலகங்களிருந்தான வேண்டுகைகள், பாதிக்கபட்பட்ட மக்களின் பட்டியல் நலனாளிகளின் பட்டியல், வழங்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட தகடுகளின் எண்ணிக்கை கொண்ட பற்றுச்சீட்டுக்கள் போன்ற விபரங்கள் கணக்காய்வுப் பரிசோதனைக்காக தரப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பில் உள்ளக இடம் பெயர்ந்த மக்களிற்கான (ஐடீபீஎஸ்) உதவி வழங்கும் நிலைமையின் அவசரம் மற்றும் அத்தியாவசியம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு கூறு விலைகள் கோரப்படுவதன் மூலம் பிரதி பிரதம செயலாளர் - நிதியின் அலுவலகத்தினால் நேரடியாக கொள்வனவு செய்யப்பட்டது. கூரைத்தகடுகள் விநியோகத்திற்காக தெல்லிப்பளை மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களிற்குக் கையளிக்கப்பட்டன. எனினும், 2013 இல் இது போன்ற நடவடிக்கைகள் உரிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் கையாளப்பட்டன. என்று பிரதம செயலாளர் உரைத்திருந்தார்.

(எ) 08 அம்புலன்ஸ் வாகனங்களின் கொள்வனவு

மீளாய்வாண்டில் பிரதேச வைத்தியசாலைகளின் பயன்பாட்டிற்காக, 8 அம்புலன்ஸ் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு மாகாணத் திறைசேரியால் ரூபா 42,000,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒவ்வொன்றும் ரூபா 4.7 மில்லியன் கிரயத்தில் 08 அம்புலன்ஸ் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. எனினும், ஒவ்வொன்றும் ரூபா 5.43 மில்லியன் விலை வீதப்படி இந்த அம்புலன்ஸ் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இதன் விளைவாக 2003 யூலை 24 ஆம் திகதிய 112 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றுநிரூபத்தின் பிரகாரம் பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாது அம்புலன்ஸ் வாகனங்களின் கொள்வனவில் ரூபா 5.85 மில்லியன் மேலதிக செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) செலவீனமானது மீளாய்வாண்டிற்கான ஆண்டு மதிப்பீட்டில் பாதீட்டு ஏற்பாடில்லாது தலைப்பு இல 451 மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(iii) ஐந்து கூறு விலைகளிற்குப் பதிலாக ஒரு கூறு விலையின் அடிப்படையில் கொள்வனவுத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமையால் கொள்வனவு வழிகாட்டிகளின் 2.14.1 ஆம் பிரிவிற்கு முரணாக கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஏ) 10 ரக்ரர்கள் மற்றும் 05 இழுவைப் பெட்டிகளின் கொள்வனவு

பிரதேச சபைகளிற்கூடாக மீள்குடியேற்ற நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு பத்து ரக்ரர்கள் மற்றும் ஐந்து இழுவைப்பெட்டிகளைக் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டில் மாகாணத் திறைசேரியில் ரூபா 13,115,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்தச் செலவினம் ஆண்டு மதிப்பீட்டில் பாதீட்டு ஏற்பாடு இல்லாமல் விவசாய, நீர்ப்பாசன, கால் நடை கடற்தொழில் மற்றும் காணி அமைச்சின் கீழ் தாக்கல் செய்யப்பட்டது.

(ii) கொள்வனவு செய்யப்பட்ட விடயங்களின் விநியோக விபரங்கள் மற்றும் விடயங்கள் பெற்றுக்கொண்டமைக்கான பற்றுச்சீட்டுக்கள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) நீரிறைக்கும் இயந்திரங்களுடன் 15 தண்ணீர் பவுசர்களின் கொள்வனவு

பிரதேச சபைகளினூடாக மீள்குடியேற்ற நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு நீரிறைக்கும் இயந்திரங்களுடன் பதினைந்து தண்ணீர் பவுசர்களை கொள்வனவு செய்வதற்காக மாகாண திறைசேரியால் ரூபா 4,425,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆண்டு மதிப்பீட்டில் பாதீட்டு ஏற்பாடின்றி இந்தச் செலவின்மை மாகாண உள்ளுராட்சித் திணைக்களத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ii) கொள்வனவு செய்யப்பட்ட விடயங்களின் விநியோக விபரங்கள் மற்றும் விடயங்கள் பெற்றுக்கொண்டமைக்கான பற்றுச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படடிருக்கவில்லை.

(ஒ) கணணிகள் மற்றும் நிழற்படப் பிரதி இயந்திரங்களின் கொள்வனவு

ரூபா 7,706,150 பெறுமதியான 11 கணணிகள் 3 நிழற்படப் பிரதி இயந்திரங்கள் மற்றும் ஏனைய மூலதன விடயங்கள் என்பன கொள்வனவு வழிகாட்டிகளின் 2.14.1 ஆம் பிரிவிற்கு முரணாக மூன்று கூறு விலைகளின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டன.

(ஓ) யாழ்ப்பாண மாவட்டத்திற்காக 8”X 6” அளவுள்ள 111 விளம்பரப் பலகைகள் (ஹோர்டிங்ஸ்) ரூபா 10,010,900 ஆக கொள்வனவு செய்தமை

மீளாய்வாண்டில் யாழ்ப்பாண மாவட்டத்திற்காக ஒவ்வொன்றும் ரூபா 87,500 விலைப்படி 111 விளம்பரப் பலகைகள் (ஹோர்டிங்ஸ்) தயாரிப்பதற்கென ரூபா

10,010,900 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவினம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்குப் பதிலாக தலைப்பு 430 மாகாண விவசாய அமைச்சுக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஐந்து கூறுவிலைகளிற்குப் பதிலாக மூன்று கூறு விலைகளின் அடிப்படையில் கொள்வனவு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமையால் கொள்வனவு வழிகாட்டிகளின் 2.14.1 ஆரம்பிப்பிற்கு முரணாக கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) 2006 இன் கொள்வனவு வழிகாட்டிகளின் 2.8.3 ஆம் பிரிவின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் சிபார்சு இல்லாமல் கொள்வனனவு மேற்கொள்ளப்பட்டது. காலம் போதாமை காரணமாக ரீ.ஈ சீயின் அறிக்கை பெற முடியவில்லை என்று விவசாய அமைச்சின் செயலாளர் இது தொடர்பில் தெரிவித்திருந்தார்.

(ஈ) ஆண்டு நிதிக் கூற்றுக்களின்படி, (பாதீடு) இந்தக் கொடுக்கல் வாங்கலின் நடவடிக்கைகள் விவசாய அமைச்சுடன் சம்பந்தமில்லாத திவிநெகும் உடன் சம்பந்தப்பட்டதாகும். எனினும், மாகாண நிதியத்திலிருந்து குறிப்பிடத்தக்க தொகைகளைப் பயன்படுத்தி திவிநெகும் செயற்திட்டத்தின் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(உ) யாழ்ப்பாணத்தின் வழங்குனர்களிடமிருந்து ஜீஐ குழாய்களுடன் ஒரு பலகையின் கிரயம் பலகைக்கு ரூபா 40,000 இற்குக் குறைவானதாகும். ஆனால், ஒரு பலகை ரூபா 87,500 வீதத்தில் கோதறடவிலுள்ள ஒரு தனியார் கம்பனியின் வழங்குனரிடமிருந்து கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் விளைவாக மேற்படி கொடுக்கல் வாங்கல்களில் ரூபா 4,162,500 ஆன மேலதிக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஔ) முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தீர்க்கப்படாத விடயங்கள்

முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள கொள்வனவுகளில் சுட்டிக்காட்டப்பட்ட ஒழுங்கீனங்களை சீராக்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) ரூபா 9,100,000 ஆக 100 மடிக் கணனிகளின் கொள்வனவு

(ii) தனியார் நிறுவனத்திற்கு (வீரசிங்கம் மண்டபம்) வாயுக்குளிரூட்டி பொருத்தல் - ரூபா 6,145,688

(iii) ரூபா 8,575,000 இற்கு 15 ரக்கர் ரிப்பர் இழுவைப் பெட்டிகள் மற்றும் 20 பவுசர்களின் கொள்வனவு

(iv) புதிய ரயோட்டாகாரின் கொள்வனவு - ரூபா 9,950,000

(v) ரூபா 8,859,500 இற்கு 700 துவிச்சக்கர வண்டிகள் கொள்வனவு

(vi) ரூபா 32,200,000 இற்கு 10 பஸ் வண்டிகளின் கொள்வனவு

(vii) வீடுகளை நிருமாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் ரூபா 59,400,000

(viii) கல்வனைஸ்ட் இரும்பு கூரைத் தகடுகளின் கொள்வனவு ரூபா 18,400.800

(ix) ஆளுநர் அலுவலகத்திற்கான தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு - ரூபா 7,006,430

(X) மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்களிற்கான 70 எண்ணிக்கையான நீர்த்தாங்கிகளின் (10001) கொள்வனவு ரூபா 894,000

(xi) யாழ்ப்பாணம், மாவட்டத்திற்காக 8‘ X 6‘ அளவில் விளம்பரப் பலகைகளின் கொள்வனவு ரூபா 865,000

(xii) உப பாகங்களுடன் சேர்த்து 200 நீரிறைக்கும் இயந்திரங்களின் கொள்வனவு ரூபா 6,580,000

(xiii) மீள்குடியேற்றப்பட்ட விவசாயிகளிற்காக விவசாய கைநூல் அச்சிடுவதற்கான கொள்வனவு ரூபா 1,152,000

(ixv) உபபாகங்களுடன் 05 மேட்டு நில கெவி டியுரி டீசல் நீரிறைக்கும் இயந்திரங்களின் கொள்வனவு - ரூபா 4,755,000

(xv) 10 கொம்பைன் அறுவடை இயந்திரங்கள் (மாதிரி 4 எல்சற் 2 – 0) கொள்வனவு ரூபா 15,300,000

(xvi) 100 கேவீஏ மின்பிறப்பாக்கிகளின் கெள்வனவு - ரூபா 2,647,128

(xvii) பழைய பூங்கா அபிவிருத்தி செலவினம் - ரூபா 10,857,486

(I) தற்காலிக கடைச் சொந்தக்காரர்களிற்கு மாகாண நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட நட்டஈட்டுக் கொடுப்பனவு அறவிடப்படாமை – ரூபா 600,000

---

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்திற்கு முரணாக 2011 ஆம் ஆண்டில் ஆறு தற்காலிக கடைச் சொந்தக்காரகளிற்கு வடமாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சினால் ரூபா 600,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் மேற்படி செலவினம் ஆண்டு மதிப்பீட்டில் பாதீட்டு ஏற்பாடுகளின்றி 471-60-4-1901 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டதென்று அவதானிக்கப்பட்டது.

(ii) மீள் நியமனம் செய்யப்பட்ட அலுவலர்களின் சம்பளங்களிலான மேலதிகக் கொடுப்பனவு - ரூபா 3,360,959

---

ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் செய்யப்பட்ட இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்களிற்கான சம்பளங்கள் 2007 மே 11 ஆம் திகதிய 09/2007 ஆம் இலக்க பொது நிருவாக சுற்று நிரூபத்திற்கு முரணாக செலுத்தப்பட்டிருந்தன. அதன் விளைவாக ரூபா 3,360,959 தொகை 2011 ஆம் ஆண்டில் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) பிரதேச வைத்தியசாலை மற்றும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தரின் (எம்ஓஎச்) அலுவலகத்தின் நிருமாணத்திற்காக மேலதிகமான காணிச் சுவிகரிப்பு - ரூபா 3.75 மில்லியன்

---

கிளிநொச்சி, பூநகரியில் பெரும் பரப்பளவான அரச காணிகள் பெறக் கூடியதாக இருந்த போதிலும் 2010 ஓகத்து 07 இல் பொதுமகனால் நன்கொடை அளிக்கப்பட்டு திணைக்களத்துக்கு சொந்தமாக 5 ஏக்கர் காணி இருந்தும் கூட பூநகரியில் எம்ஓஎச் அலுவலக கட்டிடத்தை நிருமாணிப்பதற்காக 15 ஏக்கர் காணி சுவிகரிப்பதற்கு மாகாண சுகாதார அமைச்சினால் 2011 திசெம்பர் 31 இல் ரூபா 3.75 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. சுவிகரிக்கும் சமயத்தில் ஒரு ஏக்கருக்கான சந்தை விலை ரூபா 200,000 மாத்திரமேயாகும். அதன் விளைவாக ரூபா 750,000 மேலதிகமாக செலுத்தப்பட்டது. மேலும், விலை

மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதம விலை மதிப்பீட்டாளரிடமிருந்து கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் விலை மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒரு ஏக்கர் பரப்பளவிலும் குறைவான காணியிலேயே கட்டிடம் நிருமாணிக்கப்பட்டிருந்ததென்று அவதானிக்கப்பட்டது.

(iv) ரூபா 2,887 மில்லியன் தவறான நிதிப்பயன்பாடு

ஐந்நூற்றெழுபது எண்ணிக்கையான நீரிறைக்கும் இயந்திரங்கள் கொள்வனவுக் கிரயத்தில் 50 சதவீத சலுகைப் பெறுமதியில் விவசாயப் பிரதிப் பணிப்பாளருக்கு உணவு மற்றும் விவசாயத் தாபனத்தால் வழங்கப்பட்டிருந்தது. 570 நீரிறைக்கும் இயந்திரங்களில் 264 எண்ணிக்கையான நீரிறைக்கும் இயந்திரங்கள் மாத்திரமே விவசாயிகளிற்கு விநியோகிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் 2011 ஓகத்து 15 தொடக்கம் செப்தெம்பர் 12 வரையான காலத்தில் விவசாயிகளிடமிருந்தது. ரூபா 2.887 மில்லியன் சேகரிப்பு அரசாங்க கணக்கிற்கு அனுப்பப்படாது தனிப்பட்ட வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டது. அதன் விளைவாக தனிப்பட்ட வங்கிகள் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட நிதி மாகாண விவசாயப் பணிப்பாளரால் தவறாக நிதி பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 2.15 நோக்கங்களை எய்துதல்

### மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு

மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் பிரதான குறிக்கோள் மாகாண அரச சேவைக்கு பொருத்தமான ஆட்களை சேர்ப்பதாகும். மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின் உத்தியோகதத்ரொருவரால் 41 ஆட்சேர்ப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. ஆனாலும் இந்தத் திட்டங்கள் மீளாய்வாண்டு இறுதிவரை பொருத்தமான உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்காக அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.16 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் அமுலாக்கலில் தாமதங்கள்

### (அ) மாகாண வீதி செயற்திட்டம்

(i) செயற்திட்ட உடன்படிக்கையின்படி, 100 கி.மீ மொத்த நீளத்துடன் ஏழு வீதி நிருமாணப்பொதிகள் ரூபா 2.660 மில்லியன் கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும், செயற்திட்ட அலுவலகம் ரூபா 1,515.4

மில்லியன் மொத்தப் பெறுமதியில் 55 கி.மீ மொத்த நீளமான 4 பொதிகளிற்கான வீதி வேலைகளை மட்டும் ஆரம்பித்திருந்ததுடன் 45 கி.மீ நிளமான மற்றைய 3 பொதிகளின் ஒப்பந்த வேலைகள் நிதியளிப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு எட்டு மாதங்கள் கடந்த போதிலும் ஒப்பந்தக்காரரிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் மொத்த பெறுமதி ரூபா ரூபா 1,697.2 மில்லியனாக (வற் உட்பட) இருந்தமையாலும் போதிய நிதியின்மை காரணமாகவும் மீதியான 45 கி.மீ க்கான கொள்வனவு செய்ய முடியவில்லை என்று செயற்திட்டப் பணிப்பாளர் அறிவித்திருந்தார்.

(ii) 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் கட்டுநிதியாக ரூபா 558,130,986 தொகை கிடைத்திருந்த போதிலும் கணக்குப் பதிவேடுகளின்படி, இக் காலப்பகுதியில் ரூபா 234,089,574 மாத்திரம் செலவினமாக மேற்கொள்ளப்பட்டது. எனவே 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விசேட (டொலர்) கணக்கின் மீதி ரூபா 346,653,804 தொகை செயற்திட்ட நடவடிக்கைகளிற்குப் பயன்படுத்தப்படாது பயனின்றி விடப்பட்டிருந்தது.

(i) பின்வரும் வேலைகள் செயலாற்றப்படாமை காரணமாக இரண்டு ஒப்பந்தங்கள் முடிவுறுத்தப்பட்டன.

(அ) வேண்டப்பட்ட இலக்குகளை பூர்த்தியாக்குவதில் குறைபாடு

(ஆ) வேலைத்தளத்தில் அங்கீகாரமற்ற / அனுமதியற்ற பொருட்கள் இருப்புக்கு எடுத்திருந்தமை

(இ) வேலைத்தள ஆய்வுகூடம் நிறுவப்படாமை

(ஈ) வேலைத்தளத்தில் வேண்டப்பட்ட முழு பிரதான ஆளணியும் ஈடுபடுத்தப்படாமை

(உ) வடிவமைப்பு / வரைபடங்கள் பூர்த்திசெய்யப்படாமை

(ஊ) பொருட்கள் வழங்கக் கூடிய வழங்குனர்களுக்கான சட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை

(எ) செயற்திட்டம் தொடர்பான நடவடிக்கைகளிற்காக ஆரம்பிப்பு முற்பணத்தைப் பயன்படுத்தியமைக்கான ஆவணச் சான்றுகளை வழங்கத் தவறியமை

ஆலோசனையாளரின் போதிய மேற்பார்வை இன்மை மற்றும் போதிய கண்காணிப்பு செயன்முறை இன்மை காரணமாகவே

வேலைகள் முடிவுறுத்தல் ஏற்பட்டதென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ii) 2012 திசெம்பர் 31 வரை மேற்பார்வை ஆலோசனையாளருக்கு ரூபா 61,546,563 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் 26.4 கி.மீ நீளமான வீதி வேலைகளின் இரண்டு பொதிகள் முடிவுறுத்தப்பட்டமையின் விளைவாக மேற்பார்வை ஆலோசனையாளரால் ஒப்பந்தம் நலிவாக முகாமைத்துவம் செய்யப்பட்டிருந்தது. 29.3 கி.மீ நீளமான மீதி இரண்டு பொதிகளின் முன்னேற்றம் இலக்கிலிருந்து மிகவும் பின் தங்கியிருந்தன.

(ஆ) ஆலோசனையாளரின் பதவியினரின் இயலளவு போதியதாக இருக்கவில்லை அதன் விளைாவக பயனுறுதியற்ற ஒப்பந்த நிருவாகம், தொடர்பாடல் மற்றும் வடிவமைப்பு காரணமாக குழுத்தலைவர் மாற்றப்பட்டிருந்தார்.

(இ) ஒப்பந்த வேலைகளின் கண்காணிப்பு போதாது இருந்தது.

(ஈ) முரணான கட்டளைகள், கால நீடிப்பு, திருத்தப்பட்ட வடிவமைப்புக்கள் மற்றும் சாதரண வேலைகளிற்கான அங்கீகாரம் என்பன பொருட்படுத்தக் கூடிய வகையில் தாமதமடைந்திருந்தன.

(உ) ஆலோசனையாளர் மற்றும் அவரின் பதவியணி உத்தியோகத்தர்களின் பங்கில் திறன் தொழில் தகைமை கடப்பாடு இருக்கவில்லை.

(iii) முறையற்ற மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டமை காரணமாக திருத்தப்பட்ட அளவுகளுக்கு மேல் மிகையான பாரிய அளவுகள் அவதானிகக்கப்பட்டன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| விபரம் | ஒப்பந்த இல ஐஆர்பீ/என்பீ/1 | | | | ஒப்பந்த இல ஐஆர்பீ / என்பீ/2 அதிகரிப்பு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **திரண்ட பீஓகியூ அளவு** | **திரண்ட திருத்திய அளவு** | **மேலதிக அளவு** | **அதிகரித்த சதவீதம்** | **திரண்ட பீஓகியூ அளவு** | **திரண்ட திருத்திய அளவு** | **மேலதிக அளவு** | **சதவீதம்** |
| துப்பரவாக்குதல் மற்றும் தோண்டுதல் | 22,862 | 51,196 | 28,334 | 124 | 55,719 | 62,822 | 7,103 | 13 |
| உப அத்திவாரம் | 3,276 | 4,398 | 1,122 | 34 | - | - | - | -- |
| ஏபீசீ | 16,099 | 17,816 | 1,717 | 11 | - | - | - | - |
| அணை வகை | 1,540 | 7,807 | 6,267 | 407 | 3,630 | 10,950 | 7,320 | 202 |
| விளிம்பு | 3,007 | 3,758 | 751 | 25 | 4,810 | 5,504 | 694 | 14 |

(iv) ஒப்பந்தங்களைப் பூர்த்தி செய்வதற்காக காலநீடிப்பு வழங்குவதற்கான சிபார்சு முறையோ 123 கலண்டர் நாட்கள் மற்றும் 70 கலன்டர் நாட்களாக செயற்திட்ட முகாமைத்துவ அறிக்கையின் மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்கப்பட்டன. எனினும் ஒப்பந்தக்காரர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்கள் அல்லது சூழ்நிலைகளால் கால நீடிப்புக்காக இருந்தன என்பது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. கால நீடிப்பு வழங்கப்பட்ட விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| ஒப்பந்த இல | ஒப்பந்தங்கள் பூர்த்தி செய்வதற்கான மூலத் திகதி | திருத்தம் 01 | திருத்தம் 02 | திருத்தம் 03 |
|---|---|---|---|---|
| என்பீ / 01 | 2012.07.27 | 2012.07.17 | 2013.05.05 | 2013.08.31 |
| என்பீ / 02 | 2011.11.29 | 2012.05.15 | 2012.07.06 | 2013.05.20 |

(எ) ஒப்பந்தப் பெறுமதியின் திருத்தம் மற்றும் பீஓகியூ விடயத்தில் திருத்தம் என்பன நிதியளிக்கும் முகவர் உள்ளூராட்சி அமைச்சு, மாகாண சபைகள் என்பவற்றிடமிருந்தான அங்கீகாரம் பெறப்படாது மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஒப்பந்தப் பெறுமதிகள் திருத்தப்பட்டிருந்த போதிலும் திருத்தத்திற்கான காரணங்கள் பற்றிய சான்றுகளெதுவும் கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்கவில்லை.

| ஒப்பந்த இல | மூலப் பெறுமதி | திருத்தப்பட்ட பெறுமதி | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| என்பீ / 01 | 458,115,063 | 470,693,157 | 12,578,094 |
| என்பீ / 02 | 427,502,519 | 426,894,391 | (608,128) |

(vi) மாகாண வீதி செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 2010 மே 23 இல் ஆரம்பித்திருந்தது. உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சினால் வடமாகாணத்தின் மாகாண வீதி செயற்திட்டத்திற்காக செயற்திட்ட அமுலாக்கல் ஆலோசனையாளராக ஒரு தனியார் கம்பனி நியமிககப்பட்டடிருந்தது. மூலப் பிரேரனையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏழு பொதிகளைக்கொண்ட 100 கிலோமீற்றர் வீதிகளைப் புனரமைப்பதாக இருந்ததுடன் பின்னர் நிதிப் பற்றாக்குறை காரணமாக 4 போதிகளைக் கொண்ட 55 கி.மீ ஆக்க குறைக்கப்பட்டிருந்தது. அந்த 4 பொதிகளில் இரண்டு ஒப்பந்தப் பெறுமதிகள் கீழே விபரங்கள் கொடுக்கப்பட்டவாறு திட்டமிட்டத்திற்கெதிராக நலிந்த முன்னேற்றம் காரணமாக 2012 நொவம்பர் 23 இல் நிறுத்தப்பட்டிருந்தன.

| | | நிதி முன்னேற்றம் | | பௌதீக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| நிறுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் | கி.மீ எண்ணிக்கை | திட்டமிடப்பட்டது | அடைக்கப்பட்டது | திட்டமிடப்பட்டது | அடைக்கப்பட்டது |
| பீஆர்பி/என்பீ/03 | 14 | 83% | 21% | 76% | 5.23% |
| பீஆர்பி/என்பீ/05 | 12.4 | 87% | 16% | 74% | 0.75% |
| | 26.4 | | | | |

மேற்படி ஒப்பந்தங்கள் 2012 நொவம்பர் 23 இல் நிறுத்தப்பட்டிருந்த போதிலும் புதிய ஒப்பந்தங்களை வழங்குவதன் ஊடாக 26.4 கி.மீ இல் எஞ்சியுள்ள வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## (ஆ) வட மாகாண உள்நாட்டு மட்ட போசாக்கு தலையீட்டு செயற்திட்டம்

(i) கணக்காய்விற்குத் தரப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய தகவல்களின்படி, ஆண்டிற்காகக் வழங்கப்பட்ட ரூபா 246,009,992 ஆன ஒதுக்கப்பட்ட நிதிகளில் 60 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 147,493,283 மீளாய்வாண்டில் செயற்திட்ட நடவடிக்கைகளிகாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) 2012 ஆம் ஆண்டிற்கான சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஆலோசனை சேவைகளிற்கு ரூபா 2,523,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 654,600 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- பயிற்சி திட்டத்தின் இணைப்பு “ஏ” இன் பிரகாரம் பயிற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- செயலாற்றல் மீளாய்விற்காக நான்கு கூட்டங்கள் நடாத்தப்பட்டன. எனினும், ஆலோசனையாளர் பங்குபற்றியிருக்காததுடன் யூலையில் நடாத்தப்பட வேண்டிய பொருட்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டிருக்கவில்லை.
- காலாண்டு அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளாத ஆலோசனையாளருக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. சேவை நிபந்தனைகளின் படி ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நான்கு காலாண்டு அறிக்கைகளில் ஆலோசனையளரால் ஒரு அறிக்கை மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.
- ஒப்பந்த உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட காப்புறுதி மேவுகை ஆலோசனையாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
- முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிற்கான வருகைகள் ஆலோசனையாளரால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில், உரிய தொழிற் தகைமையுடையோர் பற்றாக்குறை

காரணமாக முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் ஆலோசனையாளரால் சுகாதார மேம்பாட்டு அடிப்படை பதவியணியினர் எவரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. தாய், சேய் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் (எம்ஓஎம்சீஎச்) மற்றும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் (எம்ஓஎச்) என்போர் சகல ஐந்து மாவட்டங்களிலும் செயற்திட்டம் தொடர்பான பணிகளை நிறைவேற்றுவதாக செயற்திட்டப் பணிப்பாளர் உரைத்திருந்தார்.

(ii) அன்னையர் சங்கங்களிற்கு ஆதரவளிக்குமாறு உலக வங்கி சிபார்சு செய்திருந்த போதிலும் ஆக்கக் கூறு 3 இன் கீழ் அன்னையர் சங்கங்களிற்கு கொள்வனவுகளெதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) என்ஈஎல்எஸ்ஐபீ செயற்திட்டம்

செயற்திட்டப் பிரேரணையின்படி, ரூபா 9,662 மில்லியன் தொகை நெயற்திட்டத்தின் ஐந்து நடவடிக்கைகளிற்காக பாதீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், ரூபா 1,408.52 மில்லியன் மாத்திரம் மீளாய்வாண்டில் பலப்படுத்தப்பட்டிருந்தது. எனவே ஆண்டிற்கான 85 சதவீத பாதீட்டு ஒதுக்கீடு பயன்படுத்தப்படாமலிருந்தது.

(ஈ) அவசர வடக்கு மீளெழுச்சி செயற்திட்டம் - அவுஸ்ரேலியா நிதி

வகுதி 1 இன் கீழ் பொருட்கள் மற்றும் ஆலோசனைச் சேவைகளிற்காக மானிய உடன்படிக்கையில் ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்ட காலத்தில் செயற்திட்டத்தால் செலவினமெதுவும் செய்யப்பட்டிருக்காத அதே நேரம் வகுதி 2 இன் கீழான செலவினம் ரூபா 284,075,171 ஆல் ஒதுக்கீட்டை விஞ்சியிருந்தது.

(உ) மோதல்களால் பாதிக்கப்பட்ட பிரதேச அவசர செயற்திட்டம் (சீஏஆர்ஈ) (ஆக்கக்கூறு – ஏ)

(i) செயற்திட்டப் பிரேரணைகளின்படி, மீயாய்விற்குரிய குவிப்பு முழுச் செயற்திட்டக் காலத்திற்காகவும் ஆறு வகைகளின் கீழ் ரூபா 9,924.2 மில்லியன் தொகை பாதீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், 2012 திசெம்பர்

31 வரை ரூபா 3,405 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனவே பாதிட்டு ஒதுக்கீட்டில் 66 சதவீதமான செயற்திட்ட நிதிகள் பயன்படுத்தப்படாமல் விடப்பட்டன.

(ii) கொள்கை திட்டமிடல் அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல் அமைச்சின் 2002 ஒக்ரோபர் 15 ஆம் திகதிய எம்பீஜ/எம்பீஆர்டீ/வாகனம் ஆம் இலக்க சுற்றுநிரூபத்திற்கு முரணாக 3 வாகனங்களின் வாடகைக்காக 2012 ஏப்பிரல் 31 வரை வாகன வாடகைக் கட்டணங்களாக ரூபா 4,322,687 தொகை அண்ணளவாக செலவிடப்பட்டிருந்தது. மேலும் ஒரு கிலோ மீற்றருக்கு அண்ணவாக ரூபா 90 ஆன வாடகைக் கட்டணம் கொழும்பிலுள்ள ஒரு தனியார் கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், யாழ்ப்பாணத்தில் வாடகைக் கட்டணங்கள் ஒரு கிலோ மீற்றருக்கு ரூபா 50 மாத்திரமேயாகும் இதன் விளைவாக கொடுக்கல் வாங்கலில் சிக்கனத்தை கவனத்தில் கொள்ளாமையால் வாடகைக் கட்டணங்களாக குறிப்பிடக்கூடிய தொகைப் பணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.17 உள்ளூராட்சி சபைகளின் அலுவல்கள் மீதான மேற்பார்வை

இலங்கை அரசியலமைப்பிற்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் எட்டாம் பட்டோலையின் 4.2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் மேற்பார்வை மாகாண சபைக்கு கையளிக்கப்பட்டது. உள்ளூராட்சிச் சபைகளின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வடமாகாணத்திலுள்ள 34 உள்ளூராட்சி சபைகளில் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களை 25 உள்ளூராட்சி சபைகள் மாத்திரம் 2013 மார்ச் 31 இற்கு முன்னர் கணக்காய்விற்காக சமர்ப்பித்திருந்தன. மேலும் மீளாய்வாண்டு தொடர்பான வடமாகாணத்திலுள்ள உள்ளூராட்சிச் சபைகளின் 9 நிதிக் கூற்றுக்கள் 2013 யூன் 30 இற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) உள்ளூராட்சிச் சபைகளின் நிதிக்கூற்றுக்கள் மீது தெரிவிக்கப்பட்ட முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயங்கள் மற்றும் மறுப்பு கணக்காய்வு அபிப்பராயம் என்பவற்றின் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| மாவட்டம் | நிதிக்கூற்றுக்களில் தெரிவிக்கப்பட்ட முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தின் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | நிதிக்கூற்றுக்கள் மீது தெரிவிக்கப்பட்ட மறுப்பு கணக்காய்வு அபிப்பிராயங்களின் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 16 | 01 |
| முல்லைத்தீவு | 04 | - |
| கிளிநொச்சி | 03 | - |
| வவுனியா | 05 | - |
| மன்னார் | 01 | - |
| | 29 | 01 |

(இ) வட மாகாண சபையின் உள்ளூராட்சி ஆணையாளரோ அல்லது பிரதம செயலாளரோ அல்லது உள்ளூராட்சி என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரோ உள்ளூராட்சி சபைகளின் உள்ளகக் கணக்விற்காக பயனுறுதி மிக்கதும் அர்த்தபுஷ்டியுடையதுமான நடைமுறையை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) வீதிகள், கழிப்பறைகள் மற்றும் குழாய்க் கிணறுகளிற்கான ஒப்பந்தங்கள் 2006 கொள்வனவு வழிகாட்டிகளின் பிரகாரம் கேள்வி நடைமுறை மற்றும் கொள்வனவுக் குழு தீர்மானம் முதலியவற்றைப் பின்பற்றாது கிராம அபிவிருத்தி சங்கங்கள், மகளிர் கிராம அபிவிருத்தி சங்கங்கள், மற்றும் சனசமூக நிலையங்கள் என்பவற்றிக்கு வழங்கப்பட்டன. மேலும், கொள்வனவு வழிகாட்டிகள் மற்றும் கைநூல் என்பவற்றின் 3.9.1 ஆம் பிரிவின் பிரகாரம் சனசமூன நிலையங்களிற்கல்லாது உள்ளூராட்சி துறையின் அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக பங்களிப்பு செய்த சமூக அபிவிருத்தி சங்கங்களிற்கு மாத்திரம் (பிரஜா சங்வர்த்தன சமிதி) ஒப்பந்தங்கள் வழங்கப்பட்ட வேண்டும்.

(உ) கணக்காய்விற்குத் தரப்பட்ட தகவல்களின்படி, 34 உள்ளூராட்சி சபைகள் தொடர்பாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வருமான நிலுவைகள் ரூபா 563,665,805 கீழே விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

| மாவட்டங்கள் | உள்ளூராட்சி சபைகளின் எண்ணிக்கை | வருமான நிலுவை |
|---|---|---|
| | | ரூபா |
| யாழ்ப்பாணம் | 17 | 474,147,505 |
| முல்லைத்தீவு | 04 | 16,334,611 |
| கிளிநொச்சி | 03 | 2,575,735 |
| வவுனியா | 05 | 48,056,263 |
| மன்னார் | 05 | 22,551,691 |
| | 34 | 563,665,805 |

(ஊ) நீதிமன்றத் தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைத் தீர்வையின் அறவீடு

நியதிச்சட்ட ஏற்பாடுகளிற்கிணங்க உள்ளூராட்சி சபைகளின் பிரதேசத்தில் அமைந்துள்ள நீதிமன்றங்களால் விடுதிக்கப்பட்ட குற்றப்பணங்கள் மற்றும் மாகாண சபை அல்லது மற்றைய உள்ளூராட்சி சபைகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆவணங்களின் மாற்றம் தொடர்பான முத்திரைத் தீர்வை என்பன நேர காலத்துடன் வேண்டிக் கொள்ளாதபடியால் உள்ளூராட்சி சபைகளிற்கு அனுப்பபடாது நீதிமன்றங்களால் வைக்கப்பட்டிருந்தன. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அறவிடப்படாத நீதிமன்ற தண்டப் பணங்கள் மற்றும் முத்திரைத் தீர்மானங்கள் என்பவற்றின் விபரங்கள் பின்வருமாறிருந்தன.

| மாவட்டம் | நிலுவையாக உள்ள முத்திரைத் தீர்வை | நிலுவையில் உள்ள நீதிமன்றங்களின் தண்டப் பணங்கள் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| யாழ்ப்பாணம் | 191,158,926 | 45,043,221 |
| முல்லைத்தீவு | 10,018,147 | 101,200 |
| கிளிநொச்சி | 5,184,430 | 5,611,233 |
| வவுனியா | 34,473,179 | 7,997,604 |
| மன்னார் | 11,628,265 | 81,725 |
| | 252,462,947 | 58,834,983 |

(எ) உள்ளூராட்சிச் சபைகளின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட பொதுவான குறைபாடுகள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

(i) குறிப்பாக சுனாமியின் பின்னர் பல்வேறு அரசு சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து (என்ஜீஓஎஸ்) நன்கொடைகள் மற்றும் அன்பளிப்புக்களாக கிடைத்த சொத்துக்கள் மற்றும் பதிவேட்டுப் பொருட்கள் முறையாகப் பதிவேடுகளில் பதியப்படவில்லை.

(ii) குறிப்பாக சுனாமிக்குப் பின்னர் பல்வேறு நிறுவனங்கள் அரச சார்பற்ற நிறுவனங்களால் முறையான அதிகாரமின்றி உள்ளூராட்சிச் சபைகளின் மனிதவளங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(iii) உள்ளூராட்சி மாகாண ஆணையாளரின் ஆய்வு உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் மீது மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்,போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் அசாதரண கால தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

(v) கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதிகள் உப பதிவேடுகள் அல்லது ஏடுகளில் காட்டப்பட்ட மீதிகளுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(vi) உள்ளூராட்சிச் சபைகளின் பல உறுப்பினர்கள் அலுவலக வாகனங்களைப் பயன்படுத்தும் தகுதியில்லாதிருந்தும் அலுவலக வாகனங்களைப் பயன்படுத்தியிருந்தனர்.

(vii) உள்ளூராட்சிச் சபைகள் தமது சொந்த தொழிலாளர் அணியைப் பயன்படுத்தி நிருமாண வேலைகளை நிறைவேற்றியிருந்தனர். எனினும், முறையான வேலைத்தாள்கள் எதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே பதிவேட்டுப் பொருட் கட்டுப்பாடோ அல்லது இருப்புக் கட்டுப்பாடோ எதுவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் கணக்காய்வில் இருப்பு நிலைமை மற்றும் இருப்புக்களின் பற்றாக்குறை மேலதிகங்களை உறுதிப்படுத்தமுடியாதிருந்தது.

(viii) உள்ளூராட்சிச் சபைகளின் காணி மற்றும் கட்டிடங்களின் உண்மையான பெறுமதி காணி மற்றும் கட்டிடங்களில் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு கணக்குகளிற்குத் கொண்டுவரப்படாமையினால் நிதிக் கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ix) பல்வேறு தரப்பினர்களாலும் நன்கொடையளிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக உள்ளூராட்சி சபைகளின் சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(x) சோலை வரிகள் மற்றும் வரிகள் 25 ஆண்டுகளிற்கு மேலாக ஆதனங்களில் மதிப்பீடு மேற்கொள்ளத் தவறியமையால் அதிகரித்துக்கொள்ள முடியாதிருந்தது.

(xi) பிரதேச சபைகளிற்குச் சொந்தமான பல்வேறு காணிகள் வட பிராந்திய போக்குவரத்துச் சபையால் பஸ் தரிப்பிடங்களிற்காக பயன்படுத்திய போதிலும் வட பிராந்திய போக்குவரத்து சபையிடமிருந்து அறவீடுகளெதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(xii) யாழ்ப்பாண மாநகர சபையால், அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இது தொடர்பில் அந்த அங்கீகாரமற்ற பதவியணியினருக்காக மாநகர நிதியிலிருந்து சம்பளங்களாக ரூபா 80,653,741 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(xiii) உள்ளூராட்சி சபை சேவைகளால் மேற்கொள்ளப்பட்ட ஓய்வூதிய உதவு தொகை ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பட்டிருக்கவில்லை.

(ஏ) ரூபா 1.495,473,817 பெறுமதியான கொடுக்கல் வாங்கல்கள் கீழே கொடுக்கப்பட்ட விபரங்களின் படி கணக்காய்விற்கு வேண்டப்பட்ட தகவல்களின்மையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்யமுடியவில்லை.

| மாவட்டம் | தொகை |
|---|---|
| | ரூபா |
| யாழ்ப்பாணம் | 1,174,406,448 |
| முல்லைத்தீவு | 86,399,603 |
| வவுனியா | 220,514,060 |
| கிளிநொச்சி | 14,153,706 |
| | 1,495,473,817 |

(ஐ) மீளாய்வாண்டில் உள்ளூராட்சிச் சபைகளால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 753,536 கூட்டுமொத்த

| விபரங்கள் | தொகை |
|---|---|
| | ரூபா |
| சம்சுங் கலக்ஷி எஸ் iii தொலைபேசி கொள்வனவு | 99,990 |
| மாதாந்த கூட்டத்திற்கான சிற்றூண்டிச் செலவுகள் | 438,042 |
| நல்லூர் திருவிழா செலவுகள் | 74,575 |
| கால்பந்தாட்டக் குழுவிற்கான சிற்றூண்டி | 110,929 |
| புதுவருட அட்டைகளிற்கான அச்சிடற் கட்டணங்கள் | 30,000 |
| | 753,536 |

(ஒ) கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

ரூபா 222,079,000 பெறுமதியான ஐம்பத்து மூன்று செயற்திட்டங்கள் நிதியின்மை காரணமாக முற்றாக கைவிடப்பட்டிருந்தன.

(ஓ) செயற்திட்டங்களின் அமுலாக்கலில் தாமதங்கள்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் ரூபா 132,439,354 பெறுமதியான செயற்திட்டங்களின் அமுலாக்கலில் குறிப்பிடத்தக்க தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

## 3. கணக்களிதகைமை மற்றும் நல்லாளுகை

### 3.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மறறும் உள்ளுராட்சிச் சபைகளின் தலைவர்கள் என்போருக்கு முகவரியிடப்பட்ட அரசநிதி திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5 (4) ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது. 3 தொடரும் ஆண்டுகளிற்காக ஆண்டின் ஆரம்பத்தில் மாகாண சபையால் ஒரு கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென்ற போதிலும், அத்தகைய திட்டம் 2012 திசம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஆண்டு செயல் நடவடிக்கைத் திட்டம்

மேற்படி பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு, அரச நிதி திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம், தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்துடன் இணங்கியதாக 2010 ஆம் ஆண்டு மற்றும் தொடர்ந்து வரும் ஆண்டுகளிற்காக மாகாண சபையால் ஒரு ஆண்டு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென்ற போதிலும், மீளாய்வாணடிற்கான அத்தகைய செயல் நடவடிக்கைத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஆண்டு கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீடு சுற்று நிருபத்தின் பிரகாரம் ஆண்டுக் கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் செயற்பணிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண நிதி விதி 99 இன் பிரகாரம் மாகாண உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தால் ஆளுநர் செயலகம் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படவில்லை.

(ஆ) மா.நி.வி 101 இன் பிரகாரம் மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தால் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் தயாரிப்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஆலோசனை பெறப்படவில்லை.

(இ) மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தால் அறிக்கையிடப்பட்ட பல்வேறு விடயங்களில் மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் அர்த்தபுஷ்டியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்ளகக் கணக்காய்வு ஐய வினாக்களின் பிரதிகள் கணக்காய்விற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

## 3.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ முழு நிறுவுதல்

2000 யூன் 12 ஆம் திகதிய ஐஏஐ/2000/01 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிரூபத்தின் பிரகாரம் பல திணைக்களங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் நிறுவப்பட்டிருக்கவில்லை.

## 3.6 வடக்கு, கிழக்கு மாகாண சபையைப் பிரித்தல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் 2006 திசெம்பர் 22 இல் அப்போதைய வடக்கு கிழக்கு மாகாண சபை பிரிக்கப்பட்டது. வடக்கு மாகாண சபை 2007 சனவரி 01 இலிருந்து ஆரம்பமாகும் படி செயற்பாட்டில் உள்ளது. எனினும், பிரிக்கப்பட்டமை மற்றும் வடக்கு மாகாண சபை நிறுவப்பட்டமை. என்பன தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் 2013 திசெம்பர் 31 வரை பிரசுரிக்கப்படவில்லை. அப்போதைய வடக்கு மாகாண சபை பிரிக்கப்பட்டதிலிருந்து ஆறு ஆண்டுகள் பூர்த்தியான பின்னரே 2013 ஒக்தோபர் 25 இல் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபை நிறுவப்பட்டது.

## 3.7 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

### (அ) மாகாண சபையின் நிதியக் கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் நிதியக் கணக்குகள் 2013 மார்ச் 28 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டன.

**(ஆ) ஆளுநரின் நம்பிக்கை நிதியம்**

வடக்கு மாகாண சபைக்கான ஒரு ஆளுநரின் நம்பிக்கை நிதியம் 2007 சனவரி 01 இலிருந்து அமுலாகுமாறு செயற்பாட்டிலுள்ளது. நிதியத்தை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடு மாகாண சபையில் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அப்போதைய வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஆளுநர் தனது சொந்த முயற்சியில் ஆளுநர் நம்பிக்கை நிதியத்தை உருவாக்கினார் 2007 சனவரி 01 ஆம் திகதிய 01/2007 ஆம் இலக்க ஆளுநர் விஞ்ஞாபனத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் பொது மக்களிடமிருந்தும் நிறுவனங்கள், சங்கங்கள் என்பவற்றின் உறுப்பினர்களிடமிருந்தும் கிடைத்த நன்கொடைகள் அல்லது உதவு தொகைககள் மற்றும் பொறுப்பேற்கப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து உருவாக்கப்பட்ட இலாபம் என்பவற்றைக் உள்ளடக்கியதாக ஆளுநர் நம்பிக்கை நிதியம், இருக்க வேண்டும். எனினும், மேற்படி மூலங்களிலிருந்து எதுவித உதவு தொகையும் கிடைத்திருக்காததுடன் மீளாய்வாண்டிற்கான ஆளுநர் நம்பிக்கை நிதியத்தின் நிதிசார் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

நிதியத்தை உருவாக்குவதற்கான வடமாகாண ஆளுநரால் அங்கீகரிக்கப்ப்ட்ட விஞ்ஞாபனமோ அல்லது மாகாண சபையால் அனுமதிக்கப்பட்ட சட்ட ஏற்பாடோ இன்றி வடமாகாண ஆளுநர் நம்பிக்கை நிதியத்தின் செயற்பாடுகள் நிறுவப்பட்டிருந்தன.

**(இ) ஏனைய நிதிக் கூற்றுக்கள்**

மீளாய்வாண்டிற்கான ஏனைய நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பான 2013 ஏப்ரல் 30 இல் உள்ளவாறான முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| | நிதிக் கூற்றுக்களின் வகுதி | சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதிக் கூற்றுக்களின் மொத்த எண்ணிக்கை | 2012 ஏப்ரல் 30 வரை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மொத்த எண்ணிக்கை | 2012 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்படாத மொத்த நிதிக் கூற்றுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 32 | 32 | - |
| (ஆ) | வருமாணக் கணக்குகள் | 06 | - | 06 |

| | | | |
|---|---|---|---|
| (இ) மாகாண அரச அலுவலர்கள் முற்பணக் கணக்குகள் | 32 | 32 | - |
| (ஈ) வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் | 04 | 02 | 02 |
| | 74 | 66 | 08 |

## 3.8 மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளின் செயலாற்றல் அறிக்கைகள் சமர்ப்பித்தல்

(1) 2004 பெப்ரவரி 24 ஆம் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்று நிருபத்தின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் மாகாண சபையின் ஆண்டு செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு தரப்பட்டிருக்கவில்லை.

(2) 2004 பெப்ரவரி 24 ஆம் திகதிய 01/2004 ஆம் இலக்க பொதுத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் வடக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் 34 உள்ளூராட்சிச் சபைகளின் ஆண்டு செயலாற்றல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.9 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் சேர்த்து மாகாணச் சபையின் ஆண்டறிக்கைகளை பேரவைக்குச் சமர்ப்பித்தல்

தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை இயங்காதமையால் 2007 - 2011 வரையான ஆண்டுகளிற்கான வட மாகாண சபையின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் 2013 நொவம்பர் 30 வரை சபையின் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக 2007 இலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்காக மாகாண சபையால் பொறி முறை எதுவும் கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பதவியணியினரின் நியமனங்கள் மற்றும் வேதனங்கள், சொத்துக்களின் கொள்வனவு கணக்கீட்டு நடைமுறைகள், கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணுதல், சொத்துக்களின் பயன்பாடு முதலியவற்றில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகளின் நோக்கில் செயற்பாட்டிலுள்ள முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மாகாண சபையின் நிருவாகம் மற்றும் நிதிமுகாமையில் சிக்கனம் மற்றும் பயனுறுதியை உறுதிப்படுத்துவதற்கு போதியதாக இருக்கவில்லை என்பது வெளிப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஆளணியினரின் நியமனம் மற்றும் பதவியினரின் வேதனங்கள்

(ஆ) மேலதிக நேரம், விடுமுறை கொடுப்பனவு பதில் சம்பளம் மற்றும் உபசரணைப்படி என்பவற்றின் கொடுப்பனவுகள்

(இ) கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை சான்றுபடுத்தல்

(ஈ) காசு சேகரிப்புக்கள் மற்றும் பண அளிப்புக்கள்

(உ) களஞ்சிய நடைமுறை

(ஊ) நிலையான சொத்துப் பதிவேடுகளின் பேணுகை

(எ) அலுவலக வாகனங்களின் பயன்பாடு

(ஏ) அரசாங்க விடுதிகளின் ஒதுக்கீடு மற்றும் பராமரிப்பு

(ஒ) கணக்கீட்டுப் பதிவேடுககளின் பேணுகை

(ஓ) உள்ளகக் கணக்காய்வு

(ஔ) முற்பணக் கணக்கு முயற்சிகள் மீதான கட்டுப்பாடு